Follow us

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 504 சுபகிருது வருடம், சித்திரை மாதம் 08ஆம் திகதி வியாழக்கிழமை (21.04.2022) ஹிஜ்ரி - 1443, ரமழான் - 19 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30

## பொலிஸார் தலையிடாவிடின் நிலைமை மோசமாகியிருக்கும்

### ரம்புக்கனை சம்பவம் குறித்து அமைச்சர் பிரசன்ன



யோ. தர்மராஜ்

ரம்புக்கனையில் மக்கள் முன்னெடுத்த போராட்டத்தை கட்டுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்த பின்னரே துப்பாக்கிப் பிரயோகம் முன்னெடுக்கப்பட்டது.

02 பக்கம்

## ரம்புக்கனையில் நேற்றும் நீடித்த பொலிஸ் ஊரடங்கு

ரம்புக்கனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தவர் அதே பிரதேசத்தைச் சேர்ந்த சமிந்த லக்சான் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான அவர் சிறு வர்த்தகர் என்று தெரிவிக்கப்படுகிறது.

02 பக்கம்

# போராட்டங்கள் தொடர்கின்றன!

★நேற்றும் பல நகரங்கள் முடக்கம்

★பொதுப் போக்குவரத்தும் ஸ்தம்பிதம்

யோ. தர்மராஜ்

நாட்டில் நாளுக்கு நாள் நெருக்கடிகள் உக்கிரமடைந்துள்ள நிலையில், நேற்றும் போராட்டங்களும் எதிர்ப்பு பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டதால் பல பகுதிகள் ஸ்தம்பிதமடைந்ததுடன், போக்குவரத்துகளும் முற்றுகையிடப்பட்டன.

நாட்டின் பல பகுதிகளில் பாதைகளை மறித்தும் ரயர்களை எரித்தும் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்ததுடன், கடைகளும் மூடப்பட்டு எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டிருந்தமையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

நாட்டில் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவுமுதல் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதால் நாட்டில் பல பகுதிகளில் பாதைகளை மறித்தும் ரயர் களை எரித்தும் நேற்று (20) 2ஆவது நாளாகவும் நாட ளாவிய ரீதியில் போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

02 பக்கம்

## நினைவில் அகலா மூன்றாமாண்டு!

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் உயிரிழந்த, காயமடைந்த, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு 'தமிழன்' பத்திரிகையின் ஆழ்ந்த அனுதாபங்கள்.. உங்கள் துயரில் நாங்களும் பங்குகொள்கிறோம்.



எரிபொருள் விலை உயர்வு மற்றும் தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர்கள் மாட்டுவண்டியில் நேற்று பாடசாலைக்குச் சென்றனர்.

படம்- ஐ.சிவசாந்தன்

## சபாநாயகரின் கூற்றுப்படி ஜனாதிபதியை பதவி விலகக்கோர கட்சித்தலைவர்கள் தயார்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சபையில் தெரிவிப்பு



யோ.தர்மராஜ்

நாடாளுமன்றத்திலுள்ள கட்சித் தலைவர்கள் அனைவரும் சென்று ஜனாதிபதியை பதவி விலகுமாறு கூறினால் அதற்கு அவர் தயார் என கட்சித் தலைவர் கூட்டத்தில் சபாநாயகர் கூறியுள்ளார். எனவே, அதற்கான சந்தர்ப்பத்தை எங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தால் எதிர்க்கட்சிகள் அந்த அறிவிப்பை விடுப்பதற்கு தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றைய சபை அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது ரம்புக்கனை சம்பவம் குறித்து அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்த கருத்துக்கு பதிலளித்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், அமைச்சர் பிரசன்ன ரணதுங்க...

02 பக்கம்

## நீங்கள் கூறுவது பொய் - சபாநாயகர்; தாங்களே பச்சைப் பொய்யர் - சஜித்!

### சபையில் நேற்று கடும் வாக்குவாதம்

யோ. தர்மராஜ்

ஜனாதிபதி பதவி விலகுவது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும், சபாநாயகருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

இதன்போது, சபாநாயகரே, நீங்கள் பச்சைப் பொய்க்காரர் என சஜித் பிரேமதாச விளித்திருந்தார்.

ரம்புக்கனை சம்பவம் குறித்து நேற்று சபையில் உரையாற்றிக்கொண்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இறுதியில் நாடாளுமன்றத்திலுள்ள கட்சித் தலைவர்கள் அனைவரும் சென்று ஜனாதிபதியை பதவி விலகுமாறு கூறினால் அதற்கு அவர் தயார் என கட்சித் தலைவர் கூட்டத்தில் சபாநாயகர் கூறியதாக சபையில் தெரிவித்தார்.

எனினும், இக் கருத்திற்கு சபாநாயகர் எவ்வித மறுப்பையும் தெரிவிக்கவில்லை.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



முஸ்லிம் எம்.பி மார் அறிவிப்பை பார்க்கேக்க ச்சீ..ச்சீ ... இந்தப் பழம் புளிக்கும் என்கிற கதை போலத்தான் இருக்குது பாருங்கோ..

## முஸ்லிம் எம்.பிக்கள் நால்வர் அரச ஆதரவிலிருந்து விலகல்

அரசுக்கு வழங்கிவந்த ஆதரவை விலக்கிக்கொள்வதாக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் நேற்று அறிவித்தனர்.

தௌபீக், இஷாக் ரஹ்மான் ஆகிய எம்.பிமாருடன் தாமும் நாடாளுமன்றத்தில் அரசுக்கு வழங்கிய ஆதரவை விலக்கிக்கொள்வதாக பைசல் காசிம் எம்.பி. நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார். அதேபோல் நேற்று மாலை செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த ஹரீஸ் எம்.பி , அரச ஆதரவை விலக்கி மக்களுடன் இணைந்து போராடத் தயார் என அறிவிப்பு விடுத்துள்ளார். ஹரீஸ் எம்.பி மேலும் கூறியதாவது,

02 பக்கம்


### உஷ்



அரசாங்கத்தை கவிழ்க்கும் திரைமறைவு பேச்சுகள் வெற்றிகரமாக நடந்துள்ளதாக கூறுகிறார் எதிர்க்கட்சி பிரமுகர் ஒருவர்.

இம்மாத இறுதிக்குள் அரசியலில் பெரும் மாற்றங்கள் நடக்கலாமாம். முன்னாள் அமைச்சர்கள் பலர் இந்த மாற்றத்தின் பின்னணியில் இருப்பதாக தகவல்.

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும்போது வன்முறைகளில் ஈடுபடாதீர்!



Gotabaya Rajapaksa
@GotabayaR

Sri Lankan citizens' right to peacefully protest wont be hindered. @SL_PoliceMedia will carry out an impartial & transparent inquiry re the incident at Rambukkana which led to the tragedy for which I'm deeply saddened. I urge all citizens to refrain from violence as they protest.

### ஜனாதிபதி கோட்டாபய வேண்டுகோள்

02 பக்கம்

## இலங்கைக்கு வழங்கும் கடனுக்கான மீள்செலுத்துகை உறுதிப்பாடு அவசியம்

### சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

இலங்கைக்கு எந்தவொரு கடனையும் வழங்குவதற்கு, கடனை மீளச் செலுத்துவதற்கான உறுதிப்பாடு அவசியம் என சர்வதேச நாணய நிதியம்(IMF) தெரிவித்துள்ளது. இலங்கை பிரதிநிதிகளுடன் கடன் வழங்குவதற்கான...

02 பக்கம்

## ஹட்டன் வீதிகளில் ரயர்களை எரித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

03 பக்கம்

## இலங்கை ராஜபக்ஷக்களின் நாடல்ல; ஆட்சியை விட்டு உடனடியாக வெளியேறுக!

### அனுர பிரியதர்ஷன யாப்பா எம்.பி. நேற்று சபையில் ஆவேசம்




யோ.தர்மராஜ்

இலங்கை என்பது பிரதமர், ஜனாதிபதி அல்லது ராஜபக்ஷக்களின் நாடல்ல. எனவே, குடும்பம் ஒன்றிடம் ஆட்சி அதிகாரத்தை கொடுத்துவிட்டு, அமைதியாக தூங்கிக்கொண்டிருக்க முடியாது.

மக்கள் அச்சமடைந்துள்ளனர். அவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக வீதியில் இறங்கி போராடுகின்றனர். இனியும் எதற்காக பேசிக்கொண்டிருக்க வேண்டும்.

02 பக்கம்

## பொலிஸார் தலையிடாவிடின்...

முச்சக்கர வண்டிக்கு தீ வைத்த போராட்டக்காரர்கள், 33 ஆயிரம் லீற்றர் எரிபொருள் பவுசரை தீ வைக்க முயற்சித்த போது, பொலிஸார் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் படி அதை கட்டுப்படுத்தியதாக பொது பாதுகாப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரும் ஆளுந்தரப்பு பிரதான கொறடாவுமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ரம்புக்கனையில் நேற்றுமுன்தினம் (19) பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் கொல்லப்பட்டமை குறித்து நேற்று (20) இடம்பெற்ற சபை அமர்வில் ஆற்றிய விசேட உரையின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ரம்புக்கனையில் இடம்பெற்ற சம்பவத்திற்கு ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கமும் தனிப்பட்டமுறையில் நானும் முதலில் இரங்கலைத் தெரிவிக்கின்றேன். மேலும் சம்பவத்தில் பலியானவர்கள், அவர்களின் குடும்பங்கள், சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு எங்கள் வருத்தத்தை தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும் பிரார்த்திக்கின்றோம்.

மேலும், இந்த சம்பவத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாக்க முயற்சித்து காயமடைந்து, தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ள பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் எனது வருத்தத்தையும் அவர்கள் விரைவில் குணமடையவும் பிரார்த்திக்கின்றேன். ரம்புக்கனை போராட்டத்தினால் கிட்டத்தட்ட 10 மணி நேரமாக பாதிக்கப்பட்ட பாடசாலை குழந்தைகள், அரச ஊழியர்கள் உள்ளிட்ட பொது மக்களுக்கும் எங்களுடைய வருத்தத்தை தெரிவிக்கின்றோம்.

நேற்று (நேற்றுமுன்தினம்) ரம்புக்கனையில் இடம்பெற்ற இந்த துரதிர்ஷ்டவசமான சம்பவத்தின் பின்னர் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் பொலிஸ் மா அதிபரும் நாட்டு மக்களுக்கு சம்பவம் குறித்து விளக்கமளித்தனர்.

கடந்த காலங்களாக நாட்டின் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த அரசாங்கம் போராடும் உரிமையை ஏற்றுக்கொண்ட அரசாகும். போராடாத சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வதற்கான அவசியத்தை பாதுகாக்கும் பொறுப்புள்ள அரசாங்கமும் ஆகும்.

அமைதி மற்றும் பாதுகாப்பை பாதுகாக்கும் முக்கிய நிறுவனமான பொலிஸ்துறையானது கடந்த காலத்தில் ஒவ்வொரு போராட்டத்திலும் கடுமையாக உழைத்ததுடன், பொறுமையாகவும் செயற்பட்டன. பொது மக்களின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முழு ஒத்துழைப்பையும் வழங்கினோம். நாட்டின் பல்வேறு இடங்களில் நேற்றும் (நேற்றுமுன்தினம்) ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. சமூக வலைத்தளங்கள் மூலமாக இதற்கான அறிவிப்புகள் விடுக்கப்படுவதையும் பார்த்திருக்கிறோம். பொலிஸார் இவர்களை அடையாளம் கண்டுள்ளனர்.

கடந்த சில தினங்களாக மக்கள் விடுதலை முன்னணி, மக்களை அழைத்துக்கொண்டு பேரணிகள் சென்றதை கண்டோம். நாட்டின் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் முன்னெடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியினர் தொடர்புடையதையும் நாங்கள் கண்டுள்ளோம். அதற்குத் தொடர்புடைய புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களும் எங்களிடம் உள்ளன.

நேற்றைய (நேற்றுமுன்தினம்) ஆர்ப்பாட்டங்களின் போது பிரதான வீதிகளில் பஸ்களை பயன்படுத்தி முற்றுகையிட்டனர். இதனால், சாதாரண மக்களின் வாழ்க்கையே பாதிக்கப்பட்டன. ரம்புக்கனை சம்பவமும் அப்படியானதொன்றே. நாட்டின் இன்றைய துர்ப்பாக்கிய நிலைக்கு கடந்த காலத்தில் இந்தப் போராட்டங்களுக்கு தலைமை தாங்கிய ஒவ்வொருவரும் பொறுப்புக்கூற வேண்டும். ரம்புக்கனை சம்பவத்தை கட்டுப்படுத்த பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தனர். சுமார் 10 மணி நேரமாக பஸ்களையும் ரயில்களையும் நிறுத்தி மோசமான முறையில் நடந்துகொண்டனர். இதனால், பாடசாலை மாணவர்கள், வேலைக்கு சென்றவர்களும் பாதிக்கப்பட்டனர். முச்சக்கரவண்டிக்கு தீ வைத்த போராட்டக்காரர்கள், 33 ஆயிரம் லீற்றர் எரிபொருள் பவுசரை தீ வைக்க முயற்சித்த போது, பொலிஸார் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் படி அதை கட்டுப்படுத்தினர். தீ வைக்கப்பட்டிருந்தால் இன்று ரம்புக்கனை என்ற இடமே இருந்திருக்காது. இதன்போது, பொலிஸ் சட்டத்திற்கும் ஆலோசனைக்கும் அமையவே பொலிஸார் செயற்பட்டனர். அங்குள்ள உயர் பொலிஸ் அதிகாரி உரிய நேரத்தில் நிலைமை பற்றி முடிவு எடுக்க முடியும். உயர் அதிகாரி ஒருவரால் மட்டுமே அந்த முடிவையும் எடுக்க முடியும்.

போராட்டத்தை கட்டுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்த பின்னரே துப்பாக்கி பிரயோகம் முன்னெடுக்கப்பட்டன. இந்த சம்பவம் குறித்து விசாரணை செய்வதற்காக அவிசாவளை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் தலைமையின் கீழ் ஒரு சிறப்புப் புலனாய்வு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் எவ்வாறு செயல்பட்டனர் என்பதை ஆராய்வதற்கு, இராஜாங்க அமைச்சின் செயலாளர் தலைமையில் சிறப்பு குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சகத்தின் மேலதிக செயலாளர் மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் சட்ட ஆலோசகர் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த குழு அறிக்கையை விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைப்போம்.

அத்தோடு, இச்சம்பவம் தொடர்பில் சுதந்திரமான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணையை மேற்கொள்ளுமாறு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

போராட்டக்காரர்கள் எரிபொருள் பவுசரை தீ வைக்கவே முற்பட்டனர். அவ்வாறு தீ வைத்திருந்தால் மிகப்பெரிய பேரழிவு ஏற்பட்டிருக்கும். 2021 சியரேலியோனில் பவுசர் தீப்பிடித்ததால் 151 பேர் தீப்பிடித்து எரிந்து, உயிரிழந்தனர். எனவே, நாட்டின் சாதாரண மக்களின் அன்றாட வாழ்வை பாதுகாப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

ஜனாதிபதியின் தனியார் வீடு மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் இருந்து பொலிஸார் மிகவும் பொறுமையாகவும் சட்டபூர்வமாகவும் செயற்படுகின்றனர். அத்தோடு, ஜனநாயக ரீதியாகவே செயல்பட்டனர்.

ஆனால் இன்று இங்கு கூச்சலிடுபவர்களும், இந்த பதாதைகளை வைத்திருப்பவர்களின் பிள்ளைகளும் இதற்கு செல்லமாட்டார்கள். ஆனால், அப்பாவி மக்களை இதில் ஈடுபடுத்தி அவர்களின் உயிர்களை பறிப்பதை நினைத்து நாங்கள் வருத்தப்படுகிறோம்.

எனவே அரசாங்கமாக இந்த நாட்டின் அனைவரின் பாதுகாப்பு மற்றும் அமைதிக்காக நாங்கள் செயற்படுவோம் - என்றார்.

## நீங்கள் கூறுவது பொய்...

இதனைத்தொடர்ந்து சமூக வலைத்தளங்களில் இந்த விடயம் பெரிதும் பேசப்பட்ட நிலையில், பகல் உணவிற்கு முன்னரான சபை அமர்வின் போது சபாநாயகர் அக் கருத்தை மறுத்திருந்தார்.

இதனையடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும், சபாநாயகருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

சபாநாயகர் இது குறித்து சபையில் விளக்கமளிக்கையில்,

கட்சித் தலைவர்கள் ஒன்றாக கோரினால் ஜனாதிபதி பதவி விலக தயார் என தாம் கூறியதாக சஜித் பிரேமதாச வெளியிட்டிருந்த தகவல் பிழையானது எனவும், தாம் அவ்வாறு கூறவில்லை எனவும் சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

நான் அவ்வாறு கூறவில்லை. ஆனால், சஜித் பிரேமதாச பிழையாக திரிபுபடுத்திக் கூறியுள்ளார். 113 பெரும்பான்மையுடன் சென்றால் அவர் ஆட்சியை கொடுப்பதாகவே ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக நான் கூறினேன். இது இன்றும் செல்லுபடியானது. முடிந்தால் 113 பெரும்பான்மையை அமைத்துக்கொண்டு செல்லுங்கள். ஆனால், ஜனாதிபதியை பதவி விலகுமாறு கோருவதற்கு 225 பேருக்கும் அதிகாரமில்லை என்பதை நீங்கள் அனைவரும் புரிந்துகொள்ளுங்கள் என்றார்.

இதனையடுத்தே இருவருக்கும் இடையில் கடும் சொற்போர் மூண்டது.

**சஜித்** – கட்சித் தலைவர் கூட்டத்தில் நீங்கள் அவ்வாறு கூறினீர்கள். என் முன்னால் அமைச்சர் தினேஸ் குணவர்தனவும் இருந்தார். ஆனால், அதை இல்லை என்று சொன்னால் "நீங்கள் சபாநாயகர் அல்ல பொய்க்காரர்".

**சபாநாயகர்** – நான் கூறாத விடயத்தை உங்கள் நலனுக்காக பொய்யாக பரப்ப வேண்டாம்.

**சஜித்** – நீங்கள் கூறாத விடயத்தை நாடாளுமன்றில் வந்து சொல்லும் அளவுக்கு என்னை முட்டாள் என நினைத்தீர்களா? நான் பொய் கூற வேண்டிய தேவை எனக்கு இல்லை. நீங்கள் அப்படி கூறும்போது சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தனவும் இருந்தார். அவரை கேளுங்கள்.

(தினேஷ் குணவர்தனவை சஜித் பலதடவைகள் அழைக்கிறார். ஆனால் அவர் அதனை கூறவில்லை)

**சஜித்** – நீங்கள் கூறியதை மீண்டும் சொல்கிறேன். கட்சித் தலைவர்கள், (எதிரணியின் அனைவரும்) கேட்டால் ஜனாதிபதி பதவி விலக தயார் என்று தினேஷ் குணவர்தன இருக்கும் போதே நீங்கள் கூறினீர்கள்.

**சபாநாயகர்** – நான் அப்படி சொல்லவில்லை. 113 பேரின் ஆதரவு இருந்தால் ஜனாதிபதி புதிய அரசை நியமிக்கத் தயார் என்றே கூறினேன்.

**சஜித்** – 113 என்ற வார்த்தையே அங்கு வந்திருக்கவில்லை. இப்போதும் எங்களுக்கு 113 பேரின் ஆதரவு இருக்கிறது. அதனை நாங்கள் காண்பிக்கிறோம். ஆனால் நீங்கள் இப்படி பொய்க்கூற வேண்டாம். கட்சித் தலைவர்கள் அனைவரும் கோரினால் ஜனாதிபதி பதவி விலகுவார் என நீங்கள் சொன்ன போது நான் புதுமையடைந்தேன்.

அப்படியானால் (ஜனாதிபதியுடன்) நேரம் ஒதுக்கித்தருமாறு நான் கேட்டேன். ஆனால் எவ்வாறு இப்படி பொய்க் கூறுகின்றீர்கள். நீங்கள் ஒரு பொய்க்காரர்.

**சபாநாயகர்** – இல்லை, நான் அப்படி சொல்லவில்லை.

இந்த வாக்குவாதம் நடந்தபோது அமைச்சர் தினேஷ் குணவர்தன சபையில் இருந்தபோதும் அவர் எதனையும் கூறாமல் அமைதியாக இருந்தார்.

## சபாநாயகரின்...

ஆற்றிய உரையானது, இந்த சபையை திசைத்திருப்புவதற்கானது என்பதால் அதனை நாங்கள் முற்றாக நிராகரிக்கின்றோம். ரம்புக்கனை பகுதியில் வசித்த, கே.டி. சமிந்த லக்சான் என்ற இரு குழந்தைகளின் தந்தை, நிராயுத ஜனநாயகத்தை வெளிப்படுத்தும் உரிமை, கருத்து தெரிவிக்கும், அரசியல் செய்யும், போராடும் உரிமை மற்றும் சுதந்திரத்தை பயன்படுத்திய நபராகும். இவருடைய மரணத்துக்கு ராஜபக்ஷக்களின் காட்டுமிராண்டித்தனமும் அரச பயங்கரவாதமுமே பொறுப்புக்கூற வேண்டும்.

குறைந்தபட்ச அதிகாரத்தை பயன்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அவ்வாறாயின், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதும் கொலை செய்வதுமா குறைந்த பட்ச அதிகாரம்? காட்டு மிராண்டித்தனமும் அரச பயங்கரவாதமுமா குறைந்தபட்ச அதிகாரம்? இவற்றை கேட்டுக்கொண்டிருக்க முடியாத நரிகள் ஊளையிடுவதை கண்டு நாங்கள் குழப்பமடையவோ அச்சமடையவோமாட்டோம்.

இந்த காட்டுமிராண்டித்தனமான, பயங்கரவாத அரசாங்கம் இன்று மக்களை ஒடுக்குவற்கு முயற்சிக்கின்றன. துப்பாக்கிப் பிரயோகம் செய்து மக்களை கொலை செய்வதுதான் அரசாங்கத்தின் குறைந்தபட்ச அதிகாரமா, துப்பாக்கிப் பிரயோகம் செய்ய உத்தரவிட்ட எஸ்.எஸ்.பி. யார், அவருடைய பெயர் என்ன என்பதை உடனடியாக வெளியிட வேண்டும். புதிய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர், மனித கொலையுடனா தன்னுடைய கடமையை பொறுப்பேற்றார்?.

மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டும், சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது, மக்களின் கருத்துரிமையை பாதுகாக்க வேண்டும் என்பது அரசாங்கத்திற்கு தெரியாதா? ஒரு மாதத்திற்கும் மேலாக வரிசையில் காத்திருந்த மக்களை தற்போது இந்த அரசாங்கம் கொலை செய்ய ஆரம்பித்துள்ளது. இது மனித கொலை அரசாங்கமாகும். இதனை மக்கள் பலத்துடன் ஆட்சியை விட்டு விரட்டியடிப்போம்.

மனித கொலைகளை செய்து அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. ஒரு காலத்தில் உகண்டாவிற்கு நீரை வழங்கியவர்கள், ரத்துபஸ்வல பகுதியில் தண்ணீர் கேட்ட போது கொலை செய்தனர். அதேபோன்று, லசந்த விக்ரமதுங்க உள்ளிட்ட ஊடகவியலாளர்களையும் கொலை செய்தவர்கள் இன்று, ரம்புக்கனை பகுதியிலும் மக்களை கொலை செய்ய ஆரம்பித்துள்ளனர். இதனையே, மக்கள் போராட்டத்திற்கு முன்னெடுப்பார்கள். ஆனால், அந்த மக்களை பாதுகாக்கும் கேடயமாக ஐக்கிய மக்கள் சக்தி இருக்கும்.

பாதுகாப்பு செயலாளர், பொலிஸ் மா அதிபர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், எஸ்.எஸ்.பி. ஆகியோரை அழைத்து கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்கள் போராட்டங்களை ஏற்றுக்கொண்ட அரசாங்கம் என்றால், எதற்காக ஊரடங்கு சட்டத்தையும் மக்களை ஒடுக்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களின் துக்கத்திலும் அரசாங்கம் கொள்ளையடிப்பதற்கே முயற்சிக்கின்றது. ரம்புக்கனை சம்பவம் தொடர்பாக சுயாதீன பொலிஸ் விசாரணை முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓய்வு பெற்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்களைக் கொண்ட குழுவை நியமித்து, விசாரணை முன்னெடுக்க வேண்டும். ரம்புக்கனை பகுதியில் உயிரிழந்தவரின் குடும்பத்தின் எதிர்காலத்தின் பொறுப்பை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்றுக்கொள்கிறது. தந்தையை இழந்தால் அதன் வேதனை அந்த குடும்பத்திற்கே புரியும்.

இதேவேளை, நாடாளுமன்றத்திலுள்ள கட்சித் தலைவர்கள் அனைவரும் சென்று ஜனாதிபதியை பதவி விலகுமாறு கூறினால் அதற்கு அவர் தயார் என கட்சித் தலைவர் கூட்டத்தில் சபாநாயகராகிய நீங்கள் கூறினீர்கள். எனவே, அதற்கு எங்களுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தால் எதிர்க்கட்சிகள் அந்த அறிவிப்பை விடுப்பதற்கு தயாராக இருக்கின்றோம் - என்றார்.

## இலங்கை ராஜபக்ஷக்களின்...

முழு அரசாங்கமும் ஆட்சியிலிருந்து வெளியேற வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (20) இடம்பெற்ற நாட்டின் நெருக்கடி தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாடாளுமன்றத்தில் கடந்தவாரம் இடம்பெற்ற நிதி தொடர்பான தெரிவுக் குழுவிற்கு மத்திய வங்கி மற்றும் நிதிச் சபை ஆகியவற்றை அழைத்திருந்தபோது, ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தது எவ்வாறு எனக் கேள்வி எழுப்பியிருந்தோம். நிதிச் சபையின் உறுப்பினர் ஒருவரின் முடிவே இதற்கு காரணம் என்பது தெளிவாகியது. ஆனால், இதனை நிதி அமைச்சரோ அல்லது அமைச்சரவையோ தெரிந்திருக்கவில்லை.

தனி ஒருவரின் தன்னிச்சையான முடிவுகளினாலேயே இன்று பொருட்களுக்கு விலை நிர்ணயிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் பொறுப்பை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். மேலும், பொருத்தமற்ற நபர்களை உயரிய பதவிகளுக்கு நியமித்ததே தற்போதைய நெருக்கடிக்கு காரணமாகும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் காலத்தில் எங்களுடைய அனுமதிக்கு அமையவே குமாரசுவாமி ஆளுநராக தெரிவு செய்யப்பட்டார். என்னுடைய வீட்டில் என்னுடைய மகளின் டைப்ரைட்டரிலேயே அவருக்கான நியமன கடிதம் தயாரிக்கப்பட்டது. இவ்வாறே நாட்டின் பொருளாதாரத்தில் நாங்கள் ஒத்துழைப்பு வழங்கினோம்.

ஆனால், இன்று தன்னிச்சையான முடிவுகளை எடுக்கக்கூடிய ஒருவரை நியமித்து, இந்த அரசாங்கம் சீர்குலைந்துள்ளது. இனியும் அரசாங்கம் ஆட்சியில் இருக்க வேண்டாம். முழு அரசாங்கமும் ஆட்சியிலிருந்து வெளியேறுங்கள். மக்கள் அச்சமடைந்துள்ளனர். அவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக வீதியில் இறங்கி போராடுகின்றனர். இனியும் எதற்காக பேசிக்கொண்டிருக்க வேண்டும்.?

ஆளுந்தரப்பை விட எதிர்க்கட்சியில் சிறந்தவர்கள் இருக்கின்றனர். எனவே, அதிகாரத்தை நாடாளுமன்றத்திற்கு வழங்குங்கள். பொய்யான விடயங்களைக் கூறிக்கொண்டிருப்பவர்களுடன் இனியும் இணைந்திருக்க முடியாது. நாட்டை மேலும் சீர்குலைக்க வேண்டாம். புதிய அமைச்சரவையை நியமிப்பதை விட, இடைக்கால அமைச்சரவை ஒன்றை நியமித்து, அரசியலமைப்பு திருத்தத்தை முன்னெடுத்தாலே நாட்டை முன்னோக்கிக் கொண்டுச் செல்ல முடியும்.

இது பிரதமர், ஜனாதிபதி அல்லது ராஜபக்ஷக்களின் நாடல்ல. எனவே, குடும்பம் ஒன்றிடம் ஆட்சி அதிகாரத்தை கொடுத்துவிட்டு, அமைதியாக தூங்கிக்கொண்டிருக்க முடியாது. நெருக்கடிக்கு யாரும் பொறுப்பேற்காதிருப்பது குறித்து எங்களுக்கு கடும் அதிருப்தி இருக்கின்றன. பொறுப்பை ஏற்றுக்கொண்டு செயற்படுங்கள். ஆட்சியை விட்டு வெளியேறி, அதிகாரத்தை நாடாளுமன்ற குழுவிடம் ஒப்படையுங்கள். உண்மையை மூடி மறைக்க முடியாது. வெளியில் வந்து உண்மையை கூறுங்கள் - என்றார்.

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும்போது...

அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான உரிமைக்கு பாதிப்பு ஏற்படாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நேற்று ட்விட்டர் பதிவொன்றில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அமைதியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான உரிமைக்கு குந்தகம் ஏற்படாது. ரம்புக்கனையில் இடம்பெற்ற சம்பவம் குறித்து இலங்கை பொலிஸார் பக்கச்சார்பற்ற வெளிப்படையான விசாரணைகளை முன்னெடுப்பார்கள் – இந்த சம்பவம் காரணமாக இடம்பெற்ற துயரம் குறித்து நான் ஆழ்ந்த கவலையடைந்துள்ளேன்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும்போது வன்முறைகளை தவிர்த்துக்கொள்ளுமாறு அனைத்து பொதுமக்களையும் கேட்டுக்கொள்கின்றேன் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**31ஆம் நாள் நினைவஞ்சலி**

**C.வடிவேல்**



**கடந்த 23.03.2022 அன்று சிவபதமடைந்த A.வயலட் அவர்களின் அன்பு கணவரும், ஏகராணி, பிரசன்னா, பவாணி ஆகியோரின் அன்பு தந்தையும், சிவா ஸ்ரீதரராவ், டேவிட் கிறிஸ்டி ஆகியோரின் அன்பு மாமனாருமான அமரர் C.வடிவேல் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று 21.04.2022 வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை கொழும்பு மோதரை அந்தியேட்டி கிரியை ஆலயத்தில் கிரியைகள் நடைபெற்று, முற்பகல் 11.13 மணிக்கு பிறகு வரும் சஷ்டி திதியில் அன்னாரின் அஸ்தியானது மோதரை புனித தீர்த்தக்கரையில் கலக்கப்படும்.**

**அதனைத் தொடர்ந்து அன்று மாலை புலத்சிங்களவில் உள்ள அன்னாரது இல்லத்தில் புண்ணியதான கிரியைகள் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை என்பன இடம்பெறவுள்ளதால் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**நன்றி.**

**தகவல்:**
**சிவா ஸ்ரீதரராவ் (மருமகன்)**
**சப்ரகமுவ மாகாண தமிழ் ஊடகப் பிரிவின் பொறுப்பதிகாரி.**
**தொலைபேசி: 0712252115, 076 055 4380**

## இலங்கைக்கு வழங்கும்...

மாற்றுத் திட்டங்கள் மற்றும் கொள்கை வகுப்பு தொடர்பில் கலந்துரையாடியதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பிலான குழுவின் தலைவர் மஷிஹிரோ நொசாகி கூறியதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை மிக விரைவில் நிலையான முன்னேற்றப்பாதை நோக்கி கொண்டுசெல்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் அனுசரணையுடன் திட்டமொன்றை வகுக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் மக்கள் அடைந்துள்ள துயரங்கள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் இதன்போது கவலை தெரிவித்துள்ளது.

உடனடி நிதித்தேவையை நிவர்த்திசெய்வதற்காக கடனை மீளச் செலுத்துவதற்குள்ள இயலுமையை ஆராய வேண்டும் எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பிலான குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## முஸ்லிம் எம்.பிக்கள்...

நாட்டில் தற்போது நிலவும் விலைவாசி உயர்வுகள், மின்தடைகள், நீண்ட வரிசை அவலங்கள், பொருட்களின் தட்டுப்பாடுகளுக்கு எதிராக நடக்கும் எல்லாவித எதிர்ப்பு நடவடிக்கைகளையும் அரசாங்கமும், அரச தலைவர்களும் பார்த்துக் கொண்டிருக்கையில் அதன் நியாயத்தன்மையை சகலரும் ஏற்றுக்கொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில் மக்களின் ஜனநாயகப் போராட்டத்தை யாரும் தடுப்பதற்கில்லை. மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்த்து ஊழலற்ற சிறந்த நிர்வாக திறமை கொண்ட அரசை உருவாக்க மக்களுடன் இணைந்து போராட எந்த நேரத்திலும் தயாராக உள்ளேன். அதனால் தான் கடந்த மார்ச் 31 அன்று முஸ்லிம்களின் ஜனநாயக பேரியக்கமான எமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அட்டாளைச்சேனையில் நடத்திய பேரணிக்கு 20க்கு ஆதரவளித்த எம்.பிக்களில் முதல் ஆளாக என்னுடைய ஆதரவை தெரிவித்தேன்.

அதன்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முடிவின்படி என்னுடைய அரசியல் பயணத்தை முன்னெடுப்பதை உறுதிப்படுத்தியுள்ளேன். அதுமட்டுமின்றி எமது கட்சியின் தீர்மானத்தை மதித்து மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி மக்களின் கோரிக்கைக்கு உறுதுணையாக இருந்து கொண்டிருக்கிறேன்.

அதனால் தான் அமைச்சர் பதவிகள் உட்பட பல்வேறு சலுகைகளை அரசாங்கம் வழங்கியும் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டேன் என்று தெரிவித்தார்.

## போராட்டங்கள்...

அதன்படி, ரம்புக்கனை, திகன, பண்டாரவளை, பதுளை, கண்டி, கம்பளை, வத்தேகம, இங்குராங்கொடை, அளுத்கம, இரத்தினபுரி, தெல்தெனிய, கொழும்பு, அம்பாறை, மாத்தறை, ஹட்டன், அவிசாவளை, பலாங்கொடை, பாணந்துறை, ஹொரணை, கலவானை, காலி, இங்கிரிய மற்றும் கேகாலை உள்ளிட்ட பல பகுதிகளில் இவ்வாறு எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதனால், பொது போக்குவரத்துக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டதால் தொழிலுக்குச் செல்லும் ஊழியர்கள் உரிய நேரத்துக்குச் செல்ல முடியாத இக்கட்டான நிலைமைக்கு தள்ளப்பட்டதுடன், பாடசாலை மாணவர்களின் வருகையும் குறைவடைந்திருந்தது.

நாட்டின் நிலைமை கருதி பாடசாலை போக்குவரத்துகளிலிருந்து பாடசாலை போக்குவரத்து சாரதிகள் விலகியதால் மாணவர்கள் அசௌரியங்களுக்கு முகம் கொடுத்ததுடன், போராட்டங்கள் மற்றும் எதிர்ப்புப் பேரணிகளால் பொது போக்குவரத்தையும் பாவிக்க முடியாத நிலையில் மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிப்பதில் தயக்கம் காட்டியிருந்தனர்.

அதேபோன்று, வீதிகளை மறித்து போராட்டங்கள் நடத்தப்பட்டதால் பல பகுதிகளில் கடைகளை திறக்க முடியாது பல நகரங்கள் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தன. இதனால், மக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

## ரம்புக்கனையில்...

எரிபொருள் பெற்றுக்கொள்ள கடந்த சில நாட்களாகவே போராடிக்கொண்டிருந்த அப்பகுதி மக்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டம் செய்தபோதே பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இதேவேளை, ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு உயர் அதிகாரிகள் உட்பட 20 பேர் கொண்ட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமையவே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

# ஹட்டன் வீதிகளில் ரயர்களை எரித்து மக்கள் ஆர்ப்பாட்டம்



(க.கிஷாந்தன்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும், தொடர் விலையேற்றத்தைக் கண்டித்தும் ஹட்டன் நகரில் நேற்று காலை வீதிமறியல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால் போக்குவரத்து நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்தன.

ஹட்டன் நகரில் ரெலிகொம் முன்பாகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால் சுமார் இரண்டு மணித்தியாலயங்கள் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. இதனால் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியிருந்த னர்.

ரயர்களை வீதிகளில் எரித்து, தமது எதிர்ப்பை வெளியிட்ட அதேவேளை, ஹட்டன் நகரிலுள்ள பல வர்த்தகர்கள் தமது கடைகளை மூடியும் தமது ஆதரவை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு வழங்கினர்.

## 20.04.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 131 7 24 | 142 7245 |
| கனேடியன் டொலர் | 15 62 | 160 358 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40 1 76 | 42 3484 |
| யூரோ | 247 2 07 | 26 12 3 |
| ஜப்பான் யென் | 1 4416 | 1 546 |
| சிங்கப்பூர் டொலர் | 130 3305 | 14 560 |
| ஸ்ரேலிங் பவுன் | 318 3588 | 333 5387 |
| சுவிஸ் பிராங்க் | 234 6 20 | 248 1315 |
| ஐ.அ.டொலர் | 216 4 | 228 8868 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 711 1 37 |
| குவைட் | குவைட் தினார் | 0, 03 62 |
| ஓமான் | ஓமான் றியால் | 7 4 0732 |
| கட்டார் | கட்டார் றியால் | 74 276 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 71 5556 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 73 2874 |

# மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்






(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இலங்கை வங்கி சங்கம் மற்றும் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து கோட்டா வீட்டுக்கு போ என்ற தொனிப்பொருளில் நேற்று (20) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை வங்கி சங்கம் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்ததையடுத்து, மட்டக்களப்பு சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று (20) காந்தி பூங்காவில் அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கம், பெற்றோலிய கூட்டுதாபன சங்கம் உட்பட தொழிற்சங்கங்களை சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டோர் பகல் 12.30 மணிக்கு ஒன்றிணைந்து அரச வங்கிகளில் மேற்கொள்ளப்படும் அரசியல் அழுத்தங்களை நிறுத்து, வாழ்க்கைச் செலவை குறைத்திடு, மருந்துப் பொருட்கள், மின்சாரம், எரிபொருள், பால்மா என்பவற்றை தடையின்றி வழங்கு, ஊழல் ஊடாக சம்பாதித்த பணத்தை மக்கள் உடமையாக்கு, விவசாயிகள், மீனவர்கள், சிறு வணிகர்களுக்கு நிவாரணம் வழங்கு, கோட்டா வீட்டுக்கு போ போன்ற பல வாசகங்கள்கொண்ட சுலோகங்களை ஏந்தியவாறு கோஷமிட்டு சுமார் ஒரு மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# ரம்புக்கனை வன்முறைகள் குறித்து சுதந்திரமான விசாரணை அவசியம்

## அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்து



ரம்புக்கனை வன்முறை குறித்து இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் ட்விட்டர் பதிவில் ஜூலி சங் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் ஆயுதமேந்தாத ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான வன்முறையின் அநீதி குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டேன். ரம்புக்கனை வன்முறை குறித்த முழுமையான வெளிப்படையான விசாரணையின் அவசியம் குறித்தும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டேன். அமைதியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்கள் உட்பட அனைத்து பொதுமக்களினதும் உரிமைகளை பாதுகாப்பதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது முன்னர் எப்போதையும் விட தற்போது அவசியமாகவுள்ளது.

# மக்களுக்கு சேவை செய்வதே தலையாய கடமை என்பதை அனைவரும் மனதிற்கொள்ள வேண்டும்

## ரம்புக்கனை சம்பவம் குறித்து ரிஷாட் எம்.பி.



மக்களுக்கு சேவை செய்வதே எமது தலையாய கடமை என்பதை ஒவ்வொரு அரசியல்வாதியும், அதிகாரிகளும் மனதிற்கொள்ள வேண்டும் - என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனையில் நேற்றுமுன்தினம் (19) இடம்பெற்ற அசம்பாவித சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவர் மேலும் கூறியதாவது,

"தங்களது எதிர்காலத்துக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடி உயிர்நீத்த இளைஞருக்கும், பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொலிஸாரின் இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவை நிறுத்தப்பட வேண்டும். அத்துடன், குறித்த சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

குறித்த, மக்கள் ஆர்ப்பாட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் குறைந்தபட்ச படையணியினாலேயே ஓர் உயிர் காவுகொள்ளப்பட்டிருக்கின்றதென்றால், அதிகபட்ச படைகளை பயன்படுத்தி இருப்பின் என்ன நேர்ந்திருக்கும்?

ஆகையால், மேற்படி சம்பவத்தின் பின்புலத்தில் அரசியல் சக்திகள் இருந்தால், அதனையும் தீர விசாரித்து, கண்டறிந்து, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன்" என்று கூறினார்.

# மனோ கணேசன் தலைமையில் த.மு.கூ. தூதுக்குழு - அமெரிக்கத் தூதுவர் சந்திப்பு

## மலையக அபிலாஷை ஆவணமும் கையளிப்பு



இலங்கையில் இன்று போராடும் போராட்டக்காரர்கள் மீது வன்முறையை அவிழ்த்து விட வேண்டாம் என்ற நிபந்தனையை சர்வதேச நாணய நிதி (ஐஎம்எவ்) இலங்கைக்கு உதவும் போது, இலங்கை அரசாங்கத்தின் மீது விதியுங்கள். இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழரின் இருப்பை பதிவுசெய்துகொண்டு நமது மக்களை பற்றிய அமெரிக்காவின் அக்கறையை இலங்கை தொடர்பான உங்கள் கொள்கை நிலைப்பாடுகளின்போது வெளிப்படுத்துங்கள் - என ஜனநாயக மக்கள் முன்னணி - தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிடம் தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி தூதுக்குழு நேற்று (20) அமெரிக்கத் தூதுவரை சந்தித்து உரையாடியது. கூட்டணி சார்பில் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர் இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர். அமெரிக்கத் தரப்பில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், அரசியல் துறை அதிகாரி ரூபி வுட்சைட் ஆகியோர் கலந்துகொண்டனர். மனோ எம்.பியின் செயலாளர் பிரியாணி குணரட்னவும் உதவியாளராக கலந்துகொண்டார்.

இது தொடர்பில் மனோ எம்.பி. தனது ட்விட்டர் தளத்தில்,

"ஐ.எம்.எவ். இலங்கைக்கு உதவ நினைக்கிறது. நன்றி. ஆனால், அதை ஜனநாயக நிபந்தனையுடன் செய்க. போராளிகள் மீது வன்முறை கூடாது. காலிமுகம் உட்பட நமது போராளிகள் உலகில் மிகக் கட்டுப்பாடான போராளிகள். அமெரிக்கத் தூதர் ஜூலி சங்கிடம், ரம்புக்கனை நிகழ்வுக்கு ஒரு மணிநேரத்துக்கு முன் கூறினேன். இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார அபிலாஷைகளுக்கு இலங்கை பரப்புக்குள்ளேயே தீர்வுகள் வேண்டும்" என்று கூறியுள்ளார்.

மேலும் இந்த சந்திப்பின்போது, மலையகத் தமிழரின் அரசியல் அபிலாஷை ஆவணத்தை அமெரிக்கத் தூதுவரிடம் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் கையளித்தார். தென்னிலங்கையில் மத்திய, மேல், சப்ரகமுவ, ஊவா, தென் மாகாணங்களில் வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களின் அரசியல், சமூக, பொருளாதார வாழ்நிலைமைகள் பற்றி அமெரிக்கத் தூதுவர் கேட்டு தெரிந்துகொண்டார்.

தான் கொரிய வம்சாவளி அமெரிக்கர் என்பதில் பெருமையடைவதாகவும், இந்நிலையில் தமது நாட்டின் பன்மைத்தன்மை தமக்கு பலம் சேர்த்துள்ளதாகவும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார். இதுவே இலங்கையும் எதிர்பார்க்கும் எதிர்காலம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர்கள் அமெரிக்கத் தூதுவரிடம் கூறினார்.

மத்திய மலைநாட்டுக்கு விஜயம் செய்து நேரடியாக விடயங்களை அறியுங்கள் என கூட்டணியின் பிரதித் தலைவர் இராதாகிருஷ்ணன் விடுத்த அழைப்பையும் அமெரிக்கத் தூதுவர் ஏற்றுக்கொண்டார்.

இது தொடர்பில் அமெரிக்கத் தூதர் ஜூலி சங் தனது ட்விட்டர் தளத்தில்,

"மலையகத் தமிழர் உட்பட அநேகமான (இலங்கை) சமூகங்கள், எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு அவசியமாகின்றது. நிலையான பொருளாதார மீட்சிக்கு இலங்கை மக்களின் தலைவர்கள் அவசர நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். (இவைபற்றி) @ManoGanesan மனோ கணேசனுடன் உரையாடினேன்" என்று கூறியுள்ளார்.


## டயலொக், MAS மற்றும் Hemas ஆகியவற்றின் ஒன்றிணைவில் 'மனிதநேய ஒன்றிணைவு' அவசர நிவாரணம் வழங்கல் ஆரம்பம்!

### 100,000இற்கும் மேற்பட்ட மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சர்வோதயவுடன் இணைந்து அவசர நிவாரணம்




நாட்டில் நிலவும் சவால்மிகுந்த பொருளாதார நெருக்கடியின் காரணமாக மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்கும் நோக்கில், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் PwC Sri Lanka ஆகியன இணைந்து 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண திட்டத்தினூடே அவசர நிவாரணங்களை வழங்கும் பணிகளை கூட்டாக ஆரம்பித்துள்ளன.

பாதிப்பிற்குள்ளாகியுள்ள சமூகங்களுக்கு உடனடி உதவிகளை வழங்கும் நோக்கில், 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண திட்டமானது அதன் நிறைவேற்றுப் பங்காளரான சர்வோதய மற்றும் கணக்காய்வு பங்காளரான PwC Sri Lanka உள்ளிட்ட ஒத்த எண்ணம்கொண்ட பங்காளர்களுடன் கைகோர்த்தவாறு, டயலொக், MAS மற்றும் Hemas ஆகிய நிறுவனங்களின் நிதியுதவி பங்களிப்பில் வழங்குகின்ற மேற்படி 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரணத்தினூடே, 1,00,000இறகும் மேற்பட்ட மோசமாக பாதிக்கப்பட்டுள்ள ஆழ்ந்த வறுமையில் உள்ள குடும்பங்களுக்கு அவசர நிவாரணங்களை வழங்குகின்றது. மேலும், சுயாதீன தொலைக்காட்சி, சியத்த, ஸ்வர்ணவாஹினி, ரிவி தெரண மற்றும் வசந்தம் ஆகியன ஊடக பங்காளிகளாக இந்த முயற்சியில் இணைந்துள்ளன.

மேற்படி 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண திட்டத்தின் மூலம் 25 மாவட்டங்களில் அவசர நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. பயனுள்ள பொருளாதார முன்மாதிரி திட்டத்தினூடாக நிலையான நலன் பரிமாற்ற முறையொன்று நாட்டில் நிறுவப்படும்வரை மேற்படி 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண வேலைத்திட்டமானது 60-90 நாட்களுக்கு தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

'மனிதநேய ஒன்றிணைவு' அவசரகால நிவாரண விநியோக நடவடிக்கைகளை விரிவுபடுத்த அனைத்து பெரு நிறுவனங்களையும் இந்த முயற்சியுடன் இணைந்துகொள்ளுமாறு அழைக்கின்றது.

மனிதநேய ஒன்றிணைவு

Sarvodaya | Dialog | MAS | HEMAS

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஏப்ரல் 21ஆம் திகதி, வியாழக்கிழமை

# வெட்கம்!

ஒரு ஜனநாயக நாட்டில் உரிமைகளுக்காக போராடியோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி மீண்டும் தன் மிலேச்சத்தனத்தை வெளிக்காட்டியிருக்கிறது அரசு.

பசியோடு இருக்கும் அப்பாவி பொதுமக்களின் பட்டினிக்குக் காரணமானவர்களுக்கு எதிராக வீதியில் இறங்கி நியாயம் கோருகிறார்கள். நாட்டு மக்கள் என்றவகையில் அதற்கான சகல உரிமைகளும் அவர்களுக்கு உண்டு. ஆனால், அந்தப் போராட்டத்தை துப்பாக்கிகளைக்கொண்டு அடக்க முயல்வது அரசாங்கத்தின் மிகக் கீழ்த்தரமான நிலையை சுட்டி நிற்கிறது.

எரிபொருள் விலையேற்றம், எரிபொருளுக்கான பற்றாக்குறை, நாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ள பொருளாதாரச் சுமை ஆகியவற்றுக்கு எதிராக தொடர்ச்சியாக போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. புதிய அமைச்சரவை பொறுப்பேற்று 24 மணித்தியாலங்களுக்குள் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதைக் கண்டித்து நேற்று முன்தினம் நாடு முழுவதும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பிரதான நகரங்களில் வீதிகள் முடக்கப்பட்டன.

ரம்புக்கனையிலும் மக்கள் வீதிக்கு இறங்கி எரிபொருள் அதிகரிப்புக்கு எதிராக போராட்டம் நடத்தினார்கள். அங்கு பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பலியானதுடன், நால்வர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர். இந்தக் கலவரத்தில் பொலிஸார் 15 பேர் உட்பட 29 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கலவரத்தை தடுப்பதற்காக ஆகக்குறைந்த பொலிஸ் அதிகாரம் பயன்படுத்தப்பட்டதாக பொலிஸ் மா அதிபர் உடனடியாக பதிலளித்தார்.

எனினும், இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் ராஜபக்ஷ அரசாங்கத்தின் உண்மையான முகத்தை திரை விலக்கிக் காட்டியிருக்கிறது என்றே கூறவேண்டும்.

ரத்துபஸ்வலவில் தண்ணீர் கேட்டுப் போராடிய மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது.

வடக்கு, கிழக்கில் தமிழர்கள் ஒரு சிறு போராட்டம் நடத்தினாலும் அதனை முடக்குவதற்காக ஆயுதங்கள் சகிதம் வந்து நிற்கும் படையினர் அச்சுறுத்தும்போதெல்லாம் தெற்கில் உள்ளவர்கள் அதனைப் பொருட்படுத்துவதில்லை.

எத்தனை அச்சுறுத்தல்கள், எத்தனை துன்புறுத்தல்களை தமிழர்கள் தாங்கியிருப்பார்கள் என்பதை ரம்புக்கனை சம்பவம் சிங்கள மக்களுக்கு எடுத்துணர்த்தியிருக்கிறது.

பொதுமக்களுக்கு பிரச்சினை என்று வரும்போது பொலிஸாரையே நாடுகிறோம். ஆனால், பொலிஸாரே ஜனநாயக விரோதமாக செயற்படும்போது நிலைமையை எவ்வாறு விளக்கிச் சொல்வது? நீதிக்காக யாரை நாடுவது?

இங்கே, பொதுமக்கள் மீது உச்சபட்ச அதிகாரம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு அனுமதியளித்தது யார்? நாட்டின் பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிடாமல் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முடியுமா? அவ்வாறெனின் ஒரு நாட்டின் தலைவர், தன் மக்களைக் கொல்லப் பணித்திருக்கிறாரா?

இரத்தம் பார்த்துப் பழகியவர்களுக்கு இதுவொன்றும் புதிதல்ல. ஆனால், அவர்களின் உண்மையான முகத்தை இன்று சிங்கள மக்கள் புரிந்திருக்கிறார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு உரிமைச் சட்டத்தின் பிரகாரம் ஒரு நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் உணவை வழங்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அவ்வாறு வழங்கப்படாவிட்டால் உணவு உரிமையை மீறும் செயலாகும்.

இங்கே, உணவு உரிமை நமது நாட்டில் மீறப்படுகின்றபோது அதற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்திருக்கிறார்கள். அவர்களின் கோரிக்கையை செவிமடுத்து தீர்வை அரசாங்கம் பெற்றுக்கொடுக்க வேண்டுமே தவிர, போராட்டத்தை துப்பாக்கியால் அடக்க முற்படுவது அதிகார மீறலாகும்.

மக்கள் நியாயமான கோரிக்கையை முன்வைத்துப் போராடுகிறார்கள் என்பதை ஆட்சியாளர்கள் நன்கு அறிந்திருந்தும் அப்பாவிகளைக் கொலைசெய்திருப்பதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இராணுவத்தைக்கொண்டு மக்களை விவசாயம் செய்ய வைப்பேன் என அதிகாரத் தோரணையில் சூளுரைத்த கோட்டாபய ராஜபக்ஷ, இப்படி மனிதப் படுகொலைசெய்ய முனையமாட்டார் என நம்பிவிட முடியாதல்லவா?

சகல குற்றங்களையும் செய்துவிட்டு அமைதியாக கடந்துவிட அல்லது பொலிஸ் உயர் அதிகாரிகள் மீது அதனைச் சுமத்திவிட எத்தனிக்கும் அரச இயந்திரத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். மக்கள் வெற்றுக் காரணங்களுக்காக கிளர்ந்தெழவில்லை. அவர்களின் முகமும் வார்த்தைகளும் வலிகளைச் சொல்கின்றன. அந்த வலிகள் சாமானியனாக வாழ்பவர்களுக்கு நன்றாகப் புரியும்.

தாங்கள் நம்பி வாக்களித்து அதிகார ஆசனத்தில் வைத்து அழகுபார்த்தவர்கள் இதைப் புரிந்துகொள்வார்கள் என மக்கள் நினைத்தனர். ஆனால், அதற்கு மாறாக அப்பாவிகளின் இரத்தம் புசித்து பசி தீர்க்கிறது கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு.

இந்த அராஜகம் மேலும் தலைதூக்குமானால் மக்கள் பலத்தால் அதிகாரம் துவம்சம் செய்யப்படும். அதை ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

# தாய்மார்களே, சிந்தியுங்கள்!...



தமிழ் இனம், மொழி என்றால் நம் மக்கள் உணர்ச்சிவயப்படுவது சாதாரணமானது. கல் தோன்றி மண் தோன்றா காலத்திலேயே தமிழ் மொழி தோன்றிவிட்டதென்றும் உலகுக்கே நாகரிகம் கற்றுக்கொடுத்தவன் தமிழன் என்றும் சாதாரண பாமர மக்கள்முதல் பெரும் தலைவர்கள்வரை அனைவரும் பேசுவதைக் கேட்கிறோம்.

தமிழரின் பாரம்பரியமும் நாகரிகமும் தொன்மையானவை என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்க வழியில்லை. தமிழின் தொன்மையை - தமிழரின் கலாசாரத்தை அப்படிப் புகழும் அளவுக்கு நம் தமிழகம் அதன் கலாசார மரபைக் காத்து வந்திருக்கிறது. அதன் தொடர்ந்த உயிர்ப்புக்குத் தமிழ் பெண்களின் பங்களிப்பு அபரிமிதமானது.

பெண்கள் இந்த மண்ணின் பெருமையைக் காக்க எத்தகைய வீரத் தாய்மார்களாக இருந்தனர் என்றும் தங்கள் குடும்பங்களைக் காக்கும் தலைவியராக - தேசத்திற்காகத் தியாகம் செய்யும் தியாக தீபங்களாகப் பெண்கள் மிளிர்ந்தனர் என்பதையும் சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. குடும்பத்திற்காக தன்னைத் தியாகம் செய்யும் தலைவி, தேசத்திற்காக தன் குடும்பத்தையும் தியாகம் செய்யும் தலைவியரை சிறப்பிக்கவே மூதின்முல்லை துறை என்றொரு துறையே தமிழ் இலக்கியத்தில் ஏற்படுத்தி வைத்திருந்தனர் நம் முன்னோர்.

தொன்றுதொட்டு தமிழ் மக்கள் இந்த இலக்கியங்களைப் படித்து வந்தனர். கல்வி என்பதே நம் வரலாற்றை - பண்பாட்டை - அதன் விழுமியங்களை அறிந்துகொள்வது என்ற நிலை ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்புவரை தொடர்ந்தது.

தற்போதைய கல்வியில் நாம் அதையெல்லாம் படிப்பதில்லை. மேற்கல்வியில் தமிழ் இலக்கியம் படிப்போர் அரிதாகிப் போய்விட்டனர். இதனால் நம்முடைய பெண்கள் குடும்பம், தேசம் இரண்டிற்காகவும் எத்தகைய தியாகத்தையும் செய்யும் நெஞ்சுரம் கொண்டவர்கள் என்ற உண்மை இன்றைய தலைமுறைக்குத் தெரியாமல் போய்விட்டது.

பெண்கள் குடும்பத்தின் அச்சாணி என்று தமிழ் இனம் இன்றுவரை நம்புகிறது. நாட்டில் பெண் விடுதலை பேசப்படுவதற்கும் முன்பே நம் பெண்கள் தேசத்தின் விடுதலைக்காக முன்னின்றவர்கள் என்ற வரலாறை இன்றைக்குப் பள்ளிக்கூடங்களில் படிக்க வாய்ப்பில்லை. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தான் உருவாக்கிய இந்திய தேசிய இராணுவத்தில் பெண்கள் படைப்பிரிவை அமைத்தார். அன்றைக்கே அதில் ஐயாயிரம் பெண்கள் பங்குகொண்டனர். அதிலும் ஏறத்தாழ நான்காயிரம் பெண்கள் தமிழ்ப் பெண்களாக இருந்தனர்.

சங்கக் காலம் தொடங்கி சுதந்திரப் போராட்டம்வரை இதுதான் தமிழ்ப் பெண்களின் நிலை. இது ஒருபுறம் இருக்க, இன்றைய தமிழ்ப் பெண்களின் நிலை பற்றி யோசிக்கவேண்டியிருக்கிறது.

அன்றாடம் பாலியல் வன்கொடுமைகள் பற்றிய செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன.

இந்த வன்கொடுமைகள் ஏன் நிகழ்கின்றன? பெண் குழந்தைகள் ஏமாற்றுக்காரர்களின் கைகளில் எப்படி சிக்கிக்கொள்கிறார்கள்? பெண்கள் எந்த நம்பிக்கையில் இப்படி செயற்படுகிறார்கள்? இயல்பாக பெண்ணுக்குள் ஏற்படும் உள்ளுணர்வு இவர்களை எச்சரிக்கவில்லையா? தன்னைக் காத்துக்கொள்ளும் பக்குவம் இவர்களிடம் இல்லாமல்போனது எதனால்? இதற்கெல்லாம் யார் பொறுப்பு?

இதோடு மட்டுமல்ல, சமீபத்தில் பள்ளிக்கூடம் செல்லும் பெண் குழந்தைகள் ஓடும் பஸ்ஸில் மது அருந்துவது போன்ற காட்சிகள் பரபரப்பை ஏற்படுத்தின. சீருடையில் இருக்கும் பெண்குழந்தைகள் பலர் கண்ணெதிரே சற்றும் அச்சமற்று கும்மாளமாக மது அருந்துவது நமக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. சில நாட்களுக்கு முன் காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரு கல்லூரியில் பெண்கள் மது அருந்திய காட்சிகள். அதனால் கல்லூரியின் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாயினர் என்றும் செய்திகள் வந்தன.

இதெல்லாம் முதல்முறை அல்ல. சில ஆண்டுகளுக்கு முன் திருச்செங்கோட்டில் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பெண் குழந்தைகள் இதே தவறு செய்ததாக செய்தி. அதே ஊரில் ஆண்கள் பள்ளிக்கூடத்தில் இதே புகார் ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டதை செய்திகளில் படித்தோம்.

பள்ளிக்கூடம் படிக்கும் பெண்களுக்கு இதெல்லாம் எப்படி சாத்தியமாகிறது? குழந்தைகள் என்று நாம் கருதும் மாணவர்கள் கைகளுக்கு மது எங்கிருந்து கிடைக்கிறது? மது அருந்தலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு எப்படித் தோன்றியது? மது அருந்த யார் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தது? இப்படிப் பாதை தவறித் தடுமாறும் குழந்தைகளின் போக்குக்குக் காரணம் என்ன? யார் இதற்குப் பொறுப்பு? குழந்தைகளா? பெற்றோரா? சமூகமா? அரசா?

காலம் காலமாக இங்கே என்னுடைய குடும்பம், என்னுடைய குழந்தைகள், இதற்கு நானே பொறுப்பாளியும் தலைவியும் என்பதுதானே பெண்களின் மனப்பான்மை. என்னுடைய விருப்பம், என்னுடைய வாழ்க்கை, என்னுடைய சுகம் என்று பெண்கள் சிந்திக்கக் கற்றுக் கொடுக்கும் போக்கை முற்போக்கு சிந்தனை என்று நம்பச்செய்தது எது?

முற்போக்கு என்ற பெயரால், பெண்ணியம், பெண் விடுதலை என்ற சொற்களால் இங்கே விதைக்கப்படும் நஞ்சு யாரைக் காப்பாற்றப்போகிறது? திருமணம் கடந்த உறவு என்று குடும்பத்தைச் சிதைக்கும் சிந்தனையால் யாருக்கு இலாபம்?

குடும்பம் என்ற பாதுகாப்பு வளையத்தை உடைக்க ஏன் இத்தனை ஆர்வம் காட்டுகிறார்கள்? குடும்பம் இல்லாவிட்டால் கலாசாரத்தை எப்படி காக்கப்போகிறோம்? பெண்ணின் பாதுகாப்பு அதன் பின் எப்படி இருக்கும்? கலாசாரமற்ற இனம் வாழுமா? பாதுகாப்பற்ற பெண்மையின் நிலை என்ன? தாய்மார்களே, சிந்தியுங்கள்.

பெண்கள் கல்வி கற்கவும் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்தவும் இன்றைக்குக் களம் இருக்கிறது. சாதிக்க வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. அதேநேரத்தில் வயதுக்கு மீறிய விடயங்களைத் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்புகளும் கண்முன்னே இருக்கின்றன.

சமூக வலைத்தளங்கள் தகவல்கள் அறிவதற்கான தளம் என்பதைத் தாண்டி குற்றச்செயல்களுக்கான வலை என்பதும் உண்மை. அரசு மது விற்பனையில் ஆர்வம் காட்டுகிறது. மது ஒழிப்பினை யாரும் சிந்திக்கவும் தயாராக இல்லை.

திரைப்படங்கள், தொலைக்காட்சிகள், விளம்பரங்கள் வியாபாரத்தில் மட்டுமே கவனம் செலுத்துகின்றன. தன்னுடைய குழந்தைகள் நன்முறையில் வளர தோள் கொடுக்கவேண்டிய தகப்பன்மார்களில் பெரும்பான்மை மதுக்கடை வாடிக்கையாளர்களாய் இருக்கின்றனர். மது அருந்துதல் நாட்டுக்கும் வீட்டுக்கும் இலாபம் என்ற சிந்தனை நம் குழந்தைகள் மனதில் ஏற்பட்டால் அதற்கு அவர்களைப் பொறுப்பாளர்கள் என்று சொல்ல முடியுமா?

ஒரு பெண், தாய் என்ற ஸ்தானத்தை அடைய எத்தகைய கஷ்டத்தையும் தாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறாள். தனக்குப் பிறக்கப்போகும் குழந்தை ஒரு குறையுமின்றி ஆரோக்கியமாகப் பிறக்க வேண்டும் என்பதற்காக என்ன பத்தியம் இருக்கச் சொன்னாலும் இருந்து விடுகிறாள்.

குழந்தை பிறந்ததும் எதற்காகக் குழந்தை அழுகிறது, என்ன நேரத்தில் அதற்கு என்ன தேவை என்பதை தன் உள்ளுணர்வால் உணர்ந்து, அதற்கு குறை ஒன்றும் நேராமல் கண்ணும் கருத்துமாய் காத்துக்கொள்கிறாள். தாய்மார்களே, இப்படி நாம் அருமையாகப் பெற்ற குழந்தையைக் காப்பது இன்றைக்கு நம்முடைய கைகளில் மட்டும்தான் இருக்கிறது.

குழந்தையைப் பெறுவதற்காக பத்தியம் இருந்ததைப்போல் அவர்களை இந்தக் குற்றங்கள் மலிந்த காலத்தில் காப்பதற்காகவும் சில பத்தியங்களை இருந்தாகவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். எறும்புகூட அண்டாமல் உறக்கமின்றிக் காத்ததைப்போல் தவறான மனிதர்கள் நம் குழந்தைகளை நெருங்காமல் பார்த்துக்கொள்ளவும் விழிப்போடு இருக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். தொலைக்காட்சி, கைபேசியின் போதை இவற்றைக் கைவிட்டு குழந்தைகளுடன் நம்முடைய நேரத்தை செலவிடும் பத்தியத்தை நாம் மேற்கொண்டாக வேண்டும்.

பெண் குழந்தைகளோ, ஆண் குழந்தைகளோ இருவருக்கும் ஆரோக்கியமான குடும்ப சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டியது நம்முடைய கடமை. நாம் எதைப் பின்பற்றுகிறோமோ அதை நம்முடைய குழந்தைகளும் பின்பற்றுவார்கள். தமிழர் என்று பெருமிதம்கொள்ளும் நாம், தமிழ் கூறும் அறம், பக்தி, பண்பு முதல் அறிவியல் வரை அனைத்தையும் படிக்கும் பழக்கத்தை வழக்கமாக்க வேண்டும். தமிழ் இலக்கியத்தை தமிழர் படிக்காவிடில் தமிழ் கலாசாரம் எப்படி வாழும்?

"தற்காத்து தற்கொண்டான் பேணி தகை சான்ற சொற்காத்து சோர்விலாள் பெண்" என்பதே தமிழ்மறை கூறும் தமிழ்ப் பெண்ணின் அடையாளம் என்பதை பெண் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்துத் தன்னைக் காத்துக்கொள்ள பெண் வளர்த்துக்கொள்ள வேண்டிய குணங்களைத் தாயால் மட்டுமே தர இயலும். கணினிகள் கண்ணியம் கற்றுக் கொடுக்காது. ஆண் - பெண் இருபாலருக்கும் அவர்களின் தாயே கண்ணியத்தைக் கற்றுக் கொடுத்தால் பாதுகாப்புக்கு மற்றெவரும் தேவை இல்லை. சுற்றிலும் எதிர்மறை சிந்தனைகள் நம்மைச் சாய்த்துவிடக் காத்திருந்தாலும் ஒரு தாய் தன்னுடைய அன்பான அரவணைப்பால் - அதேநேரம் கண்டிப்பான நடவடிக்கைகளால் நட்போடு தன் குழந்தைகளுக்கு நேர்மறையான உலகுக்கு வழிகாட்டிவிட முடியும். சாதனைகளுக்கான மனப்பக்குவத்தைக் குழந்தைகள் மனதில் விதைக்க அன்னையரே உறுதிகொள்ளுங்கள்.

தியாகத் தாய்மார்கள் தோன்றிய இனத்தின் நீட்சி நாம். அன்னையர் பேணப் போகும் அறமே குழந்தைகளையும் அதன் மூலம் சமூகத்தையும் மேம்படுத்தும்.

***கோதை ஜோதிலட்சுமி***
***ஊடகவியலாளர்***

## இன்றைய நாளில்...

- ★ 1782 – இரத்தினகோசின் நகரம் (இன்றைய பேங்கொக்) முதலாம் இராமா மன்னரால் அமைக்கப்பட்டது.
- ★ 1944 – பிரான்சில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.
- ★ 1964 – டிரான்சிட்-5பிஎன் என்ற செயற்கைக்கோள் சுற்றுவட்டத்தில் இணைய முடியாமல் வளி மண்டலத்தினுள் மீளத் திரும்பியது. 0.95கிகி கதிரியக்க புளுட்டோனியம் பரவலாக சிதறியது.
- ★ 1987 – கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 106 பேர் கொல்லப்பட்டனர்.
- ★ 2019 – இலங்கை உயிர்ப்பு ஞாயிறு குண்டுவெடிப்புகள்: கொழும்பு உட்பட பல இடங்களில் உயிர்ப்பு ஞாயிறு நாளன்று மூன்று கிறிஸ்தவத் தேவாலயங்கள், நான்கு உணவகங்களில் இஸ்லாமிய அரசு ஆதரவில் தேசிய தவ்ஹீத் ஜமாத் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில் 268 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

## நக்கல் நமசிவாயம்

**அமைச்சு, இராஜாங்க அமைச்சுகள எடுத்த தமிழ், முஸ்லிம் எம்.பிமாருக்கு ஊர் ஊரா நல்ல வரவேற்பு கிடைக்கும்போல...எரிபொருள் பிரச்சினையால ஊருக்கு வரமுடியாத நிலைமை எண்டு சொல்லிப்போட்டு கொழும்புக்குள் இருக்கவேண்டியதுதான்...**








புடவைக் கைத்தொழில், உள்ளூர் உற்பத்தி மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சர் எஸ்.எம்.எம்.முஸாரப் கொழும்பு 01இல் உள்ள உலக வர்த்தக நிலைய கட்டடத்தில் 27ஆம் மாடியிலுள்ள அமைச்சில் தனது கடமைகளை நேற்று (20) பொறுப்பேற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர் ஜானக்க தர்மகீர்த்தி, சூழல் அபிவிருத்தி அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட், கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான அலி சப்ரி ரஹீம், மர்ஜான் பளீல் மற்றும் ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர். (அஷ்ரப். ஏ. சமத் )

# ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகவேண்டும்:

## தொழில்சார் வல்லுனர்கள் கூட்டாக வேண்டுகோள்



ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகவேண்டும் - என இலங்கையின் நீதித்துறை, மருத்துவத்துறை தொழில் வல்லுனர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர். அவர்கள் தங்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

நீதித்துறை மற்றும் மருத்துவத்துறையைச் சேர்ந்த கரிசனைமிக்க தொழில்வல்லுநர்கள் நாட்டின் தற்போதைய நிலை குறித்து ஆராய்வதற்காக இலங்கைக்கான திசை, தேசத்திற்கான சுயாதீன தொழில்வல்லுநர்கள என்ற அமைப்பின்கீழ் ஒன்றுகூடினர்.

பின்வரும் விடயங்கள் குறித்து நீண்டநேரம் விவாதிக்கப்பட்டது.

அனைத்து இலங்கையர்களும் எதிர்கொண்டுள்ள மோசமான பொருளாதார சமூக துயரங்கள் மற்றும் நாடளாவிய ரீதியில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களில் முன்வைக்கப்படும் வேண்டுகோள்களுக்கான காரணம்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக சட்டம் ஒழுங்கு முற்றாக சிதைவடையக்கூடிய சூழ்நிலை, அதன் காரணமாக நாட்டில் குழப்பநிலை ஏற்படுவதற்கான வாய்ப்பு.

இலங்கையின் அரசியலமைப்பு கட்டமைப்பிற்குள்ளும் சட்டத்திற்குள்ளும் இந்த பாரதூரமான நிலைமைக்கு தீர்வை காண்பதற்காக எடுக்கப்படவேண்டிய உடனடி நடவடிக்கைகள் குழுவினர் பின்வரும் தீர்மானத்திற்கு வந்தனர்.

பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும்.

★ பொதுமக்களின் வேண்டுகோளை ஏற்று ஜனாதிபதி பதவி விலகவேண்டும். (சபாநாயகருக்கான அறிவித்தல் மூலம் ஜனாதிபதி தனது பதவியை இராஜினாமா செய்வதற்கு அரசியலமைப்பின் 38 (1)(b)பிரிவு இடமளிக்கின்றது )

★ புதிய ஜனாதிபதியொருவர் தெரிவு செய்யப்படவேண்டும். (முடிவடையாத பதவிக்காலத்திற்காக நாடாளுமன்றத்தை சேர்ந்த ஒருவரை தெரிவுசெய்வதற்கு நாடாளு மன்றத்திற்கு அரசியலமைப்பு இடமளித்துள்ளது 40 – (1) (a))

★ புதிய ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்டதும் பிரதமர் பதவி விலகவேண்டும். (சபாநாயகருக்கான அறிவித்தல் மூலம் பிரதமர் பதவியை இராஜினாமா செய்வதற்கு அரசியலமைப்பின் பிரிவு இடமளிக்கின்றது. பிரதமர் பதவி விலகியதும் அமைச்சரவை கலைக்கப்பட்டதாக கருதப்படும்)

புதிய பிரதமரின் தலைமையில் 18 முக்கிய அமைச்சுகளுக்கான அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களை உள்ளடக்கிய இடைக்கால – காபந்து அரசாங்கம் பதவியேற்கவேண்டும்.

– ஒரு வருடத்திற்கு செயற்படலாம்.

– இடைக்கால அமைச்சரவையில் இடம்பெறுகின்ற நபர்கள் குறிப்பிட்ட அமைச்சரவை பொறுப்புகளை ஏற்பதற்கான உரிய கல்வித்தகுதிகள், விசேட திறமைகள் கொண்டவர்களாக காணப்படவேண்டும். அவர்கள் அதியுயர் நேர்மை கொண்டவர்களாக விளங்கவேண்டும்.

– இடைக்கால அரசாங்கத்தில் தொழில்சார் வல்லுனர்கள், மிக நேர்மையான நிபுணர்கள் அங்கம் வகிப்பதற்கு ஏற்றவிதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகவேண்டும்.

– காபந்து இடைக்கால அரசாங்கத்தின் காலத்தில் முன்னுரிமைக்குரிய நடவடிக்கையாக 20ஆவது திருத்தத்தை கைவிடுவதற்கும் உரிய மாற்றங்களுடன் 19ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்குமான முயற்சிகள் இடம்பெற வேண்டும்.


- என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

# ரம்புக்கனை துப்பாக்கிச்சூடு தொடர்பில் வெளிப்படையான விசாரணை தேவை

## அமெரிக்கத் தூதுவர் ஜூலி வலியுறுத்து

ரம்புக்கனையில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் முழுமையான மற்றும் வெளிப்படையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இலங் கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் அழைப்பு விடுத்துள்ளார்.

ரம்புக்கனையிலிருந்து வெளியாகும் செய்தியால் தான் மிகவும் வருத்தமடைந்துள்ளதாக குறிப் பிட்டுள்ள அமெரிக்கத் தூதுவர், அமைதியான போராட்டத்திற்கான மக்களின் உரிமை நிலைநாட் டப்பட வேண்டும் என தனது ட்விட்டர் தளத்தில் பதிவிட்டு வலியுறுத்தியுள்ளார்.




# ஈஸ்டர் தின தாக்குதலுக்கு நீதி கோரி பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு



பொலிஸ் தலைமையகத்தில் கத்தோலிக்க குருக்கள் மற்றும் கன்னியாஸ்திரிகள் குழுவொன்று, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சதித்திட்டம் தொடர்பான ஆதாரங்களுடன் கூடிய முறைப்பாட்டினை பொலிஸ் மா அதிபருக்கு கிடைக்கும் வகையில் வழங்கியுள்ளது.

இந்நடவடிக்கையானது நேற்று (20) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையின் சாட்சியச் சட்டத்தின்படி சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்கள், குறிப்பாக, முன்னாள் பொலிஸ் மா அதிபர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கு எதிராக அண்மையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட வழக்குகளில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களை முன்வைத்து இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# சுகாதார நிலைமையை கருத்திற்கொண்டு முகக்கவசம் அணிவதை தொடருங்கள்

## மருத்துவர்கள் மக்களிடம் கோரிக்கை

நாட்டில் நிலவும் சுகாதார சீர்கேடு மற்றும் ஸ்திரமற்ற சூழ்நிலையை கருத்திற்கொண்டு முகக்கவசம் அணியும் பழக்கத்தை தொடருமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

நாட்டில் முகக்கவசம் அணிவது மற்றும் பொது இடங்களில் வளாகத்திற்குள் நுழையும்போது உடல் வெப்பநிலையை சரிபார்ப்பது ஆகியவை கடந்த திங்கட்கிழமைமுதல் அமுலுக்குவரும் வகையில் சுகாதார அதிகாரிகளால் தளர்த்தப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் நிபுணர்கள் அடங்கிய சிறப்புக் குழு எடுத்த முடிவைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்க செயலாளர் ஷெனால் பெர்னாண்டோ தெரிவித்தார்.

எனினும், தொற்றுநோய்களின்போது நடைமுறையில் இருந்த அடிப்படை சுகாதார நடவடிக்கைகளைத் தொடருமாறு பொதுமக்களிடம் அவர் அறிவுறுத்தியுள்ளார்

முகக்கவசம் உட்பட்ட சுகாதார நடைமுறைகள் காரணமாக சுவாச அமைப்பு தொடர்பான நோய்களால் வைத்தியசாலையில் சேர்க்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டிருந்தாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்க செயலாளர் ஷெனால் பெர்னாண்டோ தெரிவித்தார் இந்நிலையில், முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என்றாலும், போராட்டங்கள் மற்றும் பிற குழு நடவடிக்கைகளில் பங்கேற்கும் போது அடிப்படை சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதை மக்கள் மனதிற்கொள்ள வேண்டும் என்று ஷெனால் பெர்னாண்டோ வலியுறுத்தியுள்ளார்.

# எரிபொருள் கொண்டுசெல்லும் வாகனங்களை தடுக்கவோ அல்லது சேதப்படுத்தவோ வேண்டாம்!

## பொலிஸார் மக்களிடம் கோரிக்கை



எரிபொருள் ஏற்றிச்செல்லும் வாகனங்களுக்கு இடையூறு விளைவிப்பதிலிருந்தும், சேதப்படுத்துவதிலிருந்தும் விலகிக்கொள்ளுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பவுசர்கள் மூலம் எரிபொருள் விநியோகம் தற்போது தொடர்வதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரான அஜித் ரோஹண தெரிவித்தார்.

பல்வேறு குழுக்களால் நேற்று பல எரிபொருள் பவுசர்கள் சேதப்படுத்தப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் விநியோகப் பொறிமுறை சீர்குலைந்தால் அது மருந்து, உணவு மற்றும் இதர பொருட்களின் போக்குவரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே, பொதுமக்கள் எரிபொருள் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியான முறையில் பேரணிகளை நடத்துமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# நாட்டின் நிலைமையால் களப்பணிகள் வரையறை

## கிராம உத்தியோகத்தர் சங்கம் தீர்மானம்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக அலுவலக நாட்கள் மற்றும் களப்பணிகளை மட்டுப்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை கிராம உத்தியோகத்தர் சங்கம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அந்தச் சங்கம் , அரச சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

திங்கள், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் மாத்திரம் அலுவலகம் மற்றும் களப்பணிகளில் ஈடுபடவுள்ளதாக குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முன்னர் செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் அலுவலக செயற்பாடுகளிலும் திங்கட்கிழமை பொதுமக்கள் தினமாகவும் கிராம சேவகர்கள் பணியாற்றியிருந்தனர்.

# எரிபொருள் பவுசர் தீயிடலை தடுப்பதற்காக குறைந்த அதிகாரம் பயன்படுத்தப்பட்டது

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

ரம்புக்கனை ஆர்ப்பாட்டக்காரர் மத்தியில் 30,000 லீற்றர் எரிபொருளுடனான பவுசர் ஒன்றை தீயிடுவதற்கு சிலர் மேற்கொண்ட முயற்சியை தடுப்பதற்கும் ஏற்படவிருந்த பாரிய அனர்த்தத்தை தடுப்பதற்கும் பொலிஸார் ஆகக்குறைந்த அதிகாரத்தைப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டதாக பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனை பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் இந்த விடயங்களை பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரம்புக்கனை ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் தங்களது அதிகாரத்தை அளவுக்கு அதிகமாக பயன்படுத்தினார்களா என்பது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக நேற்றுமுன்தினம் காலை ரம்புக்கனை பிரதேசத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்ப்புகையை பயன்படுத்தியதை தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்களினால் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

# ரம்புக்கனை சம்பவத்தை ஆராய மூவர் கொண்ட குழு நியமனம்

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

ரம்புக்கனையில் இடம்பெற்ற சம்பவம் குறித்து விசாரணை மேற்கொள்வதற்காக மூவர் கொண்ட குழுவை நியமித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்டியில் உள்ள அலுவலகத்திலிருந்து விசேட குழுவொன்று சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவிடமிருந்து விரிவான விசாரணை அறிக்கையை உடனடியாக கோரியுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவி ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் ரோஹினி மாரசிங்க தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனையில் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 24 பேர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது



அரசியல் தலையீடுகளிற்கு எதிர்ப்பு தெரிவித்தும் மத்திய வங்கியின் சுதந்திரத்தை பாதுகாக்கோரியும் மத்திய வங்கியின் பணியாளர்கள் நேற்று கோட்டையிலுள்ள மத்திய வங்கியின் அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# அரசுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் எதிர்ப்புப் போராட்டங்கள்


திருகோணமலை


பசறை


தம்புள்ளை


தங்காலை


பதுளை


கேகாலை



நுவரெலியா


வட்டவளை



பொகவந்தலாவை


நானுஓயா



கொட்டகலை



பத்தனை


ராகலை


இறக்குவானை

# எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஏ-9 வீதியின் குறுக்கே பஸ்களை நிறுத்திப் போராட்டம்



(வவுனியா நிருபர்)

வவுனியா, மூன்றுமுறிப்பு, வன்னி இராணுவத் தலைமையகத்திற்கு அருகே நேற்று முன்தினம் (19) மாலை 5.30 மணியளவில் ஏ-9 வீதியின் குறுக்கே சாரதிகள் பஸ்ஸை நிறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டமையினால் ஏ-9 வீதியூடான போக்குவரத்து சுமார் 2 மணித்தியாலயம் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தது.

எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிர்ப்பு, பஸ் கட்டணம் உயர்வில் திருப்தியில்லை, டீசலை பெற்றுக்கொள்ள எமக்கு எரிபொருள் நிலையமொன்றை ஏற்பாடு செய்யவேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து மூன்று முறிப்பு பகுதியில் ஏ-9 வீதியின் குறுக்கே சாரதிகள் பஸ்ஸை நிறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் ஏ-9 வீதியின் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்ததுடன் நீண்ட வரிசையில் வாகனங்கள் காத்திருந்தன.

சம்பவ இடத்திற்கு வவுனியா உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மல்வலகே உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் வருகைதந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் கலந்துரையாடியதுடன், தனியார் பஸ்கள் டீசலை பெற்றுக்கொள்வதற்கு தனியான ஓர் எரிபொருள் நிலையத்தினை ஏற்பாடு செய்வதாக வாக்குறுதியளித்தனர்.

இதனையடுத்து இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்களை செல்லவிட முடியாதென ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுத்து நிறுத்தியதுடன், ஏனைய வாகனங்கள் செல்வதற்கு அனுமதி வழங்கியிருந்தனர். பஸ்களை பொலிஸார் மாற்றுப்பாதை பயன்படுத்துமாறு திருப்பி யனுப்பி வருகின்றனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும், வாகன சாரதிகள் சிலருக்கும் இடையில் வாய்த்தர்க்கங்கள், முரண்பாடுகளும் ஏற்பட்டிருந்தன. குறித்த பகுதியில் ஆர்ப்பாட்டம் காரணமாக பதற்ற நிலை காணப்பட்டதுடன் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

# கடையடைப்புக்கு மத்தியில் யாழில் அரச பஸ்கள் சேவையில்



(யாழ். நிருபர்)

நாடு தழுவிய ரீதியில் நேற்று கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் யாழ்ப்பாண நகரத்தில் அரச பஸ்கள் சேவையில் ஈடுபட்டன.

அத்துடன், தனியார் பஸ்கள் எவையும் சேவையில் ஈடுபடவில்லை.

வர்த்தக நிலையங்கள் சில முழுமையாகவும் பெரும்பாலான நிலையங்கள் பகுதியளவிலும் திறந்திருந்தன. மக்கள் நடமாட்டம் குறைவாக காணப்பட்டது.

பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர் குறைவாக காணப்பட்டதுடன், ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருகை தந்திருந்தனர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் வரிசையில் நின்று எரிபொருளை நிரப்பிச் சென்றனர்.



**யா/போக்கட்டி அ.த.க. பாடசாலையின் கால்கோள் விழா நேற்று முன்தினம் (19) பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்ற புதுமுக மாணவர் வரவேற்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக கணக்காளர் செல்வி செ.கலைமதியும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் செ.மயூரனும் கலந்து சிறப்பித்திருந்தனர். (சாவகச்சேரி நிருபர்)**

# யாழ். மத்திய கல்லூரிக்கு அதிநவீன வசதிகளுடன் கூடிய பஸ் வழங்கிவைப்பு



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பாவனைக்காக சுமார் 7.6 மில்லியன் பெறுமதியான அதிநவீன பஸ் ஒன்று பாடசாலையின் பழைய மாணவர்களால் கட்டமைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பஸ் குழுமம் என்ற அமைப்பினரால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

பஸ்ஸை சம்பிரதாயபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (19) ஜெஷிமா ரெக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரும் மத்திய கல்லூரியின் சிரேஷ்ட பழைய மாணவருமான முஹமட் ஜெமில் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர் கலாநிதி எழில்வேந்தன் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், பல்துறைசார் தொழில்துறைகளில் இருந்துவரும் பாடசாலையின் பழைய மாணவர்கள் பலர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக்கொண்ட யாழ். மத்திய கல்லூரியானது, 90களுக்கு முன்னர் வடபகுதியில் பஸ் ஒன்றை தன்னகத்தேகொண்டிருந்த ஒரே ஒரு பாடசாலையாக காணப்பட்டுள்ளது.

அதன்பின்னர் அதாவது 90களின் பிந்தைய காலத்தில் நாட்டில் காணப்பட்ட பல்வேறு சூழ்நிலைகளால் பஸ் வசதியைப் பெறுவதில் பல்வேறு சவால்களையும் அவற்றைப் பராமரிப்பதில் இடையூறுகளையும் பாடசாலை சந்தித்துவந்த நிலையில் 2019ஆம் ஆண்டு இந்த வரையறுக்கப்பட்ட பஸ் குழுமம் என்ற கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக மிகக் குறுகிய காலத்துக்குள் அதாவது, இரண்டு ஆண்டுகளில் பாடசாலையின் கனவு நனவாக்கப்பட்டு அது நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

பாடசாலைக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளுள் பஸ்ஸும் அவசியமானதொன்று.

அந்தவகையில் எதிர்பார்த்த கனவு நனவாகியிருப்பதால் இந்தக் கல்லூரியின் வரலாற்றில் அன்றைய நாள் வரலாற்று முக்கியம் வாய்ந்ததாக பதியப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் வங்கி ஊழியர் சங்கத்தினர் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை வங்கி, ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா, புட்சிற்றிக்கு முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று (20) மதியம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், "ஊழல்கள் ஊடாக சம்பாதித்தவற்றை மக்கள் உடைமையாக்கு, வங்கி வலையமைப்பை பாதுகார், அரச நிறுவனங்களின் விற்பனையை உடன் நிறுத்துக, வாழ்க்கைச் செலவை குறைத்திடு, மக்கள் கருத்துக்கு செவிசாய்த்து இயலாமையுடைய அரசே வீட்டுக்கு போ, வெளிநாட்டு கறுப்புப்பண சந்தையை நிறுத்து" என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்ததுடன், அரசாங்கத்திற்கு எதிரான கோஷங்களையும் எழுப்பினர்.

சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்ற குறித்த ஆர்ப்பாட்டத்தில் வங்கி ஊழியர்கள் மற்றும் புதிய மாக்சிச லெனினிச கட்சி உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்து செட்டிகுளத்தில் கதவடைப்புப் போராட்டம்



(வவுனியா நிருபர்)

நாட்டில் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்து நேற்று (20) செட்டிகுளத்தில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு நாடுபூராகவும் நடைபெறும் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், அரசாங்கத்தை வீட்டுக்குசெல்ல வலியுறுத்தியும் நாடு முழுவதும் இடம்பெறும் போராட்டங்களுக்கு ஆதரவாக கதவடைப்புப் போராட்டத்திற்கு 300 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்திருந்தன.

அந்தவகையில், அதற்கு ஆதரவு தெரிவித்து வவுனியா, செட்டிகுளம் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு மக்கள் பொருட்களின் விலையேற்றத்திற்கு எதிராக இந்த அரசாங்கத்திற்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளதுடன், குறித்த பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கும் மாணவர் வரவு மிகக் குறைவாக காணப்பட்டமையால் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

# வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் 2016ஆம் ஆண்டின் பின்னர் எந்தவித நிதி அறிக்கையும் இல்லை

## கோப் குழுவில் புலப்பட்டது

வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் 2016ஆம் ஆண்டின் பின்னர் எந்தவித நிதி அறிக்கையும் தயாரிக்கப்படாமை கோப் குழுவில் புலப்பட்டது.

வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் 2015 மற்றும் 2016 ஆம் நிதியாண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதன் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழு (கோப்) அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தலைமையில் நேற்று முன்தினம் (19) நாடாளுமன்றத்தில் கூடியபோதே இந்த விடயம் புலப்பட்டது.

கணினி மென்பொருள் பிரச்சினையால் 2017, 2018, 2019 ஆகிய ஆண்டுகளுக்கான தரவுகள் அழிந்துள்ளதாக அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர். இதனால் நிதியறிக்கை தொடர்பான தகவல்கள் இல்லை என அவர்கள் குறிப்பிட்டனர்.

அதற்கமைய, இது தவறுக்கான காரணம் அல்ல என கோப் குழுவின் தலைவர் குறிப்பிட்டதுடன், இந்தத் தகவல்களை வேறு ஓர் இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்திருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். மேலும், இது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய நபர்கள் யார் என்பதையும் கோப் குழுவின் தலைவர் வினவினார்.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்தத் தகவல்கள் அழிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டாலும் இங்கு சிக்கலொன்று காணப்படுவதாகவும் நியாயமான சந்தேகம் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார். அதனால் இது தொடர்பில் விரைவாகக் குற்றவியல் விசாரணை திணைக்களத்தினால் விசாரணையொன்றை ஆரம்பிக்குமாறு கோப் குழு பரிந்துரை வழங்கியது.

விசேடமாக இந்த நிதி அறிக்கைகள் குறித்த தகவல்கள் குறிப்பிடப்படவில்லை என்பதால் 2016ஆம் ஆண்டுமுதல் இடம்பெற்ற ஒருசில நிதி நடவடிக்கைகள் தொடர்பில் கோப் குழுவில் உரிய முறையில் கலந்துரையாட முடியாமல் போயுள்ளதாக கோப் குழுவின் தலைவர் இங்கு சுட்டிக் காட்டினார். அதேபோன்று 2018ஆம் ஆண்டில் இலங்கை வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 500 மில்லியன் ரூபா கடன் தொகை தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இந்தக் கடனில் அதிகளவு தொகை ஊழியர்களின் சம்பளம் வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளமை புலப்பட்டது. இதற்கு முன்னர் இலங்கை வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடனும் இந்தக் கடன் மூலம் பெறப்பட்ட நிதியால் வழங்கப்பட்டுள்ளமை இதன்போது புலப்பட்டது. ஆனால், அந்தக் கடனை 2023ஆம் ஆண்டுமுதல் மீண்டும் செலுத்த ஆரம்பிக்க வேண்டும். எனினும், வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் உள்ளிட்ட ஏனைய அதிகாரிகள் இந்தக் கடனை 2023ஆம் ஆண்டிலிருந்து வழங்குவதற்கு ஆரம்பிக்க வேண்டும் என்பதை அறியாமல் உள்ளதாகவும் இங்கு புலப்பட்டது.

இந்தக் கூட்டுத்தாபனத்தில் நிரந்தர வேலைத்திட்ட நியமனமாக பொது முகாமையாளர் பதவி மாத்திரம் காணப்படுவது இங்கு குறிப்பிடப்பட்ட மற்றுமொரு விசேட அம்சமாகும். ஏனைய பதவிகள் ஒப்பந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. அதனால் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும் நிதிப் பணிப்பாளர் தற்பொழுது தனது இராஜினாமாவை அறிவித்துள்ளதாக இங்கு தெரிவிக்கப்பட்டது. எனினும், இந்தக் கூட்டுத்தாபனத்தை கோப் குழுவுக்கு அழைப்பதற்கு முன்னைய ஒரு தினம் வழங்கப்பட்டிருந்ததால் கோப் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு மாத்திரம் அவர் தொடர்ந்தும் சேவையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

அதனால் அவர் இந்தத் தொழிலிலிருந்து விலகினாலும் இந்தக் கூட்டுத்தாபனத்தில் உள்ள நிதி பிரச்சினைகள் தொடர்பில் நன்றாக அறிந்திருப்பதால் வேறொரு தொழிலுக்கு செல்வதற்கு அவருக்கு அனுமதி வழங்கினாலும் அவரை வெளிநபராக தொடர்புகொண்டு அவரின் உதவியின் கீழ் இந்த நிதி அறிக்கைகளை முறையாக தயாரிக்குமாறு கோப் குழுவின் தலைவர் பரிந்துரை வழங்கினார்.



அதேபோன்று வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஏப்ரல் 18ஆம் திகதிமுதல் தான் இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளதாக இங்கு புலப்பட்டது. எனினும், இது தொடர்பில் பணிப்பாளர் சபை அனுமதி மற்றும் அமைச்சின் அனுமதி இதுவரை கிடைக்கவில்லை என்பதால் அவரது விலகல் சட்டரீதியற்றது எனவும் அதனால் ஏப்ரல் 21ஆம் திகதி அவரை கோப் குழுவுக்கு அழைப்பதற்கு பரிந்துரைப்பதாக குழுவின் தலைவர் தெரிவித்தார்.

மேலும் 2017ஆம் ஆண்டு கட்டடம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட புனர்நிர்மாணம் காரணமாக நிதி அறிக்கைகள் தொடர்பான ஆவணங்கள் காணாமல்போயுள்ளதாகவும் இங்கு புலப்பட்டது.

அதற்கமைய மூன்று மாதங்களுக்குள் 2017, 2018, 2019 ஆம் ஆண்டுகளுக்கான நிதி அறிக்கைகளை மற்றும் வியாபாரத் திட்டத்தை தயாரிக்குமாறு குழுவின் தலைவர் பரிந்துரை வழங்கினார்.

இந்தக் குழு கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்ரமரத்ன, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, மதுர விதானகே, ஜயந்த சமரவீர மற்றும் ஜகத் புஷ்பகுமார ஆகியோர் கலந்துகொண்டனர்.


திகதி 19.04.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4737
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 33,375,428.00
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 9 3 1 2 8 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 767
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,994,260.00
வெற்றி இலக்கினம் M வெற்றி இலக்கங்கள் 18 30 32 43
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,821,643.60

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 0046
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,287,300.00
இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 06 09 24 26
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,708,342.20

கோடி 24 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1085
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,604,020.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 247,863,790.00
O 15 15 22 30 60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk

# எரிபொருள் விலை அதிகரிப்பைக் கண்டித்து திருமலையில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்









(கந்தளாய், நிலாவெளி நிருபர்கள்)

எரிபொருளுக்கான விலை தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டுவரும் நிலையில், கடந்த 18ஆம் திகதி நள்ளிரவு இந்தியன் எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் விலைக்கு நிகராக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் விலை அதிகரிப்பை மேற்கொண்டதைக் கண்டித்து திருகோணமலையின் பல வீதிகளிலும் தடைகளை இட்டு பலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கண்டி வீதியின் 4ஆம் கட்டை சந்தி, மட்டிகளி பிரதான வீதி, நிலாவெளி வீதியின் சிறிமாபுர, வரோதயநகர் போன்ற வீதிகளில் தடைகளை இட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பெசில் வெளியேறு, கோட்டா வெளியேறு, மஹிந்த வெறியேறு என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டபடி பாதைகளை மறித்திருந்தனர். திடீரென மேற்படி போராட்டத்தை மேற்கொண்டதால் அப்பாதைகளில் பயணித்த பொதுமக்கள் மிகுதியாக சிரமப்பட்டதைக் காணமுடிந்தது.

நிலாவெளி வீதியால் பயணித்த மக்கள் வெளியேற வழியில்லாத நிலையில், ஜமாலியா பிரதேச கடற்கரையூடாக அப்பிரதேச இளைஞர்களின் உதவியுடன் தமது வாகனங்களை பிரதான வீதிக்கு கொண்டுவந்து பயணித்ததை அவதானிக்க முடிந்தது.

திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் பஸ் ஒன்றினை வீதிக்கு குறுக்கே நிறுத்தி உப்புவெளி பகுதிக்குச் செல்லும் வீதியும் மறிக்கப்பட்டுள்ளது. கடைகள் மற்றும் மத்திய மீன் சந்தை மூடப்பட்டுள்ள அதேவேளை, பாடசாலைக்கும் மாணவர்கள் செல்லவில்லை என பாடசாலை வட்டாரங்களிலிருந்து அறியக் கிடைத்தது.

மேலும் காலை, தொழில் நிமித்தம் சென்ற பலரும் திருப்பியனுப்பப்பட்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

# 13 வயது சிறுமியை வன்புணர்விற்குட்படுத்தி 10 இலட்சம் ரூபா கப்பம் கோரிய விவகாரம்

## கைதான இருவருக்கும் மே 02வரை விளக்கமறியல்




(பாறுக் ஷிஹான்)

13 வயது சிறுமியை வன்புணர்விற்கு உட்படுத்தி வீடியோ ஒன்றினைக் காட்டி 10 இலட்சம் ரூபா கப்பம் கேட்டு நீண்டகாலமாக மிரட்டிவந்த இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம், கல்முனை பொலிஸ் பிரிவிலுள்ள சாய்ந்தமருது பகுதியைச் சேர்ந்த 13 வயதான தனது மகளை 3 சந்தேக நபர்கள் வீடியோ காணொளி ஒன்றினை முன்வைத்து கப்பம் கேட்பதாக கடந்த 2022.01.05 அன்று சிறுமியின் தாயாரினால் கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய பொலிஸார் தலைமறைவாக இருந்த 3 சந்தேக நபர்களையும் அடையாளம் கண்டு தேடுதல் மேற்கொண்டுவந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை (18) கப்பம் கோரிய சந்தேக நபரான மட்டக்களப்பு, ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவரை கல்முனை பகுதி உணவகமொன்றில் வைத்து கைதுசெய்தனர். அதன்பின்னர் கைதானவரின் தகவலுக்கமைய இச்சம்பவத்திற்கு உடந்தையாக செயற்பட்ட மற்றுமொரு சந்தேக நபரான சாய்ந்தமருது பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவர் அவரது வீட்டில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறு கைதான இரு சந்தேகநபர்களையும் பொலிஸ் விசேட பிரிவின் தகவலுக்கமைய கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்ஷீன் பக்கீரின் வழிகாட்டலில் துரிதமாக செயற்பட்ட கல்முனை குற்றப்புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் தலைமைக் குழுவினர் கைதுசெய்திருந்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இரு சந்தேக நபர்களிடமும் பொலிஸார் விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் (19) கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். எதிர்வரும் மே 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளதுடன், பிரதான சந்தேகநபரான சாய்ந்தமருது பகுதியைச் சேர்ந்த மற்றுமொரு சந்தேகநபர் டுபாய்க்கு தப்பிச்சென்ற நிலையில் அவரை கைதுசெய்ய பிடியாணை உத்தரவைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



***மக்களுக்கு தமது அரசாங்கம் ஒருபோதும் கஷ்டங்கள ஏற்படுத்தாதாம் எண்டு பிரதமர் மகிந்த சொல்லுறாரு எலுவா?***

***அப்ப இஞ்ச இப்போ கஷ்டப்படுறதெல்லாம் மனிசன் இல்ல மாடுகள் எண்டுதான் இந்த மனிசன் நினைச்சிருக்காருடாப்பா சோக்கான பிரதமர் ..***

***அலிபாபாவும் நாற்பது திருடர்களும் எண்ட மாதிரித்தான் கோட்டாட அரசாங்கம்!***

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# லொறியை முந்திச்செல்ல முயன்ற வேன் விபத்து: 5 வயது சிறுவன் உயிரிழப்பு; எழுவர் படுகாயம்!





(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - ஹொரவப்பொத்தானை பிரதான வீதி நொச்சிக்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்த நிலையில் 7 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (19) 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையிலிருந்து வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறியை முந்திச்செல்ல முற்பட்ட வேன் விபத்துக்குள்ளானதில் வேனில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் படுகாயமடைந்த நிலையில், 5 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த சிறுவன் ஹொரவப்பொத்தானை, விலேவெவ பகுதியைச் சேர்ந்த கௌசித ஹஸரல் (5 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, உயிரிழந்த சிறுவனின் தாய் மற்றும் தந்தை படுகாயமடைந்து மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளனர்.

அத்துடன், 4 பேர் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதுடன், விபத்து தொடர்பிலான விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# குச்சவெளி பகுதியில் பள்ளிவாசல் திறப்புவிழா



(கந்தளாய் நிருபர்)

குச்சவெளி பிரதேச சபையின் உப தவிசாளர் ஏ.எஸ்.எம்.சாஜித் முயற்சியால் கட்டப்பட்ட குச்சவெளி - 04 வட்டார தக்கியா பள்ளிவாசல் திறப்புவிழா நிகழ்வில் பிரதேச சபையின் உபதவிசாளர் ஏ.எஸ்.எம்.சாஜித் தலைமையில் நேற்று முன்தினம் (19) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பள்ளிவாசலை திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் குச்சவெளி பிரதேச சபையின் உறுப்பினர்களான எம்.ஐ.எம். சலீம், ஏ.அமீன்பரீஸ், வீ.எம்.நிசாத் மற்றும் பள்ளிவாசல் நிர்வாகிகள், குறித்த மஹல்லாவாசிகள், உலமாக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ரம்புக்கனை விவகாரத்திற்கு பொறுப்பேற்று பாதுகாப்பு அமைச்சர் பதவி விலகவேண்டும்

## சாணக்கியன் எம்.பி. கோரிக்கை



(மட்டக்களப்பு நிருபர்)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உடன் பதவி விலகவேண்டும் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ரம்புக்கனையில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன், காயமடைந்த மேலும் 11 பேர் கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து ரம்புக்கனையில் மக்கள் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது ரயில் மார்க்கத்திற்கும் தடை ஏற்படுத்தப்பட்டது. இதனால் ரயில் சேவைகள் முற்றாக பாதிக்கப்பட்டன.

அத்துடன், எரிபொருள் பவுசர் ஒன்றையும் மக்கள் தடுத்து நிறுத்தியிருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், போராட்டக்காரர்களை கலைந்து செல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், போராட்டக்காரர்கள் கலைந்து செல்லவில்லை. இதனையடுத்து கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பதிலுக்கு போராட்டக்காரர்களும் கல்வீச்சு தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தனர். இதனால் ரம்புக்கனை பகுதி போர்க்களமாக மாறியது.

இதனைத் தொடர்ந்து சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டுள்ளனர். இதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்நிலையில் இதற்கு கண்டனம் வெளியிட்டு, தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ள பதிவிலேயே இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக பிரசன்ன ரணதுங்க பதவியேற்று 48 மணித்தியாலங்களில் ஓர் உயிர்ப்பலி எடுக்கப்பட்டுள்ளதாகவும் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

எனவே குறித்த சம்பவத்திற்கு பொறுப்பேற்று பிரசன்ன ரணதுங்க உடன் பதவி விலகவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# இளைஞர்களின் பாவனைக்கு கையளிக்கப்படாமலேயே துருப்பிடித்து அழியும் சாய்ந்தமருது கரப்பந்தாட்ட மைதானம்








(நிந்தவூர் நிருபர்)

விளையாட்டுத் துறைசார் நிபுணர்களின் ஆலோசனை பெறப்படாமல் சாய்ந்தமருது கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கரப்பந்தாட்ட மைதானத்தின் சுற்றுவேலியும் கரப்பந்தாட்ட இரும்புக்கம்பியும் துருப்பிடித்து அழியும் நிலைக்குள்ளாகி வருகின்றது.

நாட்டின் சகல பகுதிகளிலும் இலங்கையின் தேசிய விளையாட்டான கரப்பந்தாட்டத்தை பிரபல்யப்படுத்தும் வகையில் கிராமத்திற்கு ஒரு கரப்பந்தாட்ட மைதானம் அமைக்கும் திட்டத்தின் அடிப்படையில் சாய்ந்தமருதில் இம்மைதானம் அமையப்பெற்றுள்ளது.

சாய்ந்தமருதில் கரப்பந்தாட்ட மைதானத்தை அமைப்பதற்குப் பொருத்தமான இடமிருந்தும் மிகவும் நெருக்கமான இடத்தில் தற்போதைய மைதானம் அமையப்பெற்றுள்ளது.


சூரிய ஒளியின் தாக்கத்தை தவிர்க்க வடக்கு தெற்காக அமையவேண்டிய மைதானம் கிழக்கு மேற்காக அமையப்பெற்றுள்ளதால் காலையிலும் மாலையிலும் இந்த மைதானத்தைப்பயன்படுத்த முடியாதுள்ளதாக விளையாட்டுத் துறைசார் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, கரப்பந்தாட்டம் விளையாடும் எல்லை சீமெந்து கட்டாக அமைந்திருப்பதால் விளையாடும்போது வீரர்கள் உபாதைக்குள்ளாகும் சந்தர்ப்பம் அதிகமாகவுள்ளது.

மக்களின் பாவனைக்கு இன்னும் கையளிக்கப் படாத இம் மைதானத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து பொருத்தமான இடத்தில் அமைக்குமாறு விளையாட்டு வீரர்கள் கேட்டுள்ளனர்.

# மட்டக்களப்பில் முதலாம் தரத்திற்கு புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு





(மட்டக்களப்பு நிருபர்)

முதலாம் தரத்திற்கு புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வுகள் நேற்று (20) மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் மிகச்சிறப்பாக இடம்பெற்றுள்ளன.

இதனடிப்படையில் மட்டக்களப்பு, கல்குடா கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளிலும் முதலாம் தரத்திற்கு புதிய மாணவர்களை வரவேற்கும் விழா நடைபெற்றது.

அதன் ஒரு நிகழ்வாக பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலயத்தின் அதிபர் க.கதிர்காமநாதன் தலைமையில் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்விற்கு அதிதிகளாக பிரதேச பாடசாலை அதிபர்களான சி.முருகவேல், அ.ஜெயஜீவன் ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

புதிய மாணவர்கள் சுபவேளையில் இறை வணக்கத்துடன் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஆசியுடன் தரம் இரண்டு மாணவர்களினால் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு, வகுப்பறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அதிபர் மற்றும் கௌரவ அதிதிகளினால் மாணவர்களின் எதிர்கால கல்வி தொடர்பான அறிவுரைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## இவ்வருடத்தில் 283 பேர் அடையாளம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்குநோய் பரவல் அதிகரித்து வருகின்றது. கடந்த ஏப்ரல் 09ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 15ஆம் திகதிவரையான காலப்பகுதியில் 36 பேர் டெங்குநோய் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர்.



இந்தவாரம் டெங்கு தாக்கத்தினால் பாதிப்புக்குள்ளான மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 10 நோயாளர்களும், களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 8 நோயாளர்களும், ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 6 நோயாளர்களும், செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 4 நோயாளர்களும், கோரளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 நோயாளர்களும், கிரான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 நோயாளர்களும், வாழைச்சேனை, ஓட்டமாவடி, வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா ஒரு நோயாளருமாக மொத்தம் 36 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இருப்பினும், காத்தான்குடி, பட்டிப்பளை, வவுணதீவு, வாகரை, ஆரையம்பதி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயாளர்கள் எவரும் இனங்காணப்படவில்லை.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருடத்தில் இதுவரை 283 பேர் டெங்குநோய்த் தாக்கத்திற்குட்பட்டுள்ளதாகவும் இதுவரை எவரும் டெங்கு நோயினால் மரணமடையவில்லை எனவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ.சுகுணன் மாவட்ட ஊடகப் பிரிவிற்கு தகவல் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கிக் கிடக்கின்ற குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி, டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு இடம்கொடுக்காத வகையில் சூழலை துப்புரவாக வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# கடைக்குக் கடை வேறுபட்ட விலைகளில் விற்பனைசெய்யப்படும் பேக்கரி உற்பத்திகள்

## நுகர்வோர் பெரும் அசௌகரியம்

(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களிலுள்ள ஹோட்டல்களிலும் தேநீர் கடைகளிலும் பேக்கரி உற்பத்திப் பொருட்கள் கடைக்குக் கடை வேறுபட்ட விலைகளில் விற்பனைசெய்யப்பட்டு வருவதனால் நுகர்வோர் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

கோதுமை மா, எரிவாயு, சுவையூட்டி மற்றும் ஏனைய பாவனைப் பொருட்களின் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து பேக்கரி உற்பத்திப் பொருட்கள் கடைக்குக் கடை வித்தியாசமான விலைகளில் விற்பனை செய்யப்படுவதுடன், தரமும் சுவையும் குறைவடைந்தும் காணப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, புனித நோன்பு காலமாக இருப்பதனால் மாலைவேளைகளில் விற்பனைசெய்யப்படும் பெற்றிஸ், சமோசா, மரக்கறி ரொட்டி, இறைச்சி ரொட்டி போன்ற கோதுமை உணவுப் பொருட்களின் தரம் மற்றும் அளவு சிறிதாகவும் அதிக விலையிலும் விற்பனைசெய்யப்பட்டு வருகின்றன.

நுகர்வோர் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களும் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறு நுகர்வோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டக்களப்பிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் தமிழகத்தில் தஞ்சம்!



(மட்டக்களப்பு, கல்லடி நிருபர்கள்)

மட்டக்களப்பைச் சேர்ந்த தாய் மற்றும் அவரது மகன், மகள் என மூவர் இந்தியாவின் தனுஷ்கோடிக்கு அகதிகளாக நேற்று (20) அதிகாலை சென்றடைந்துள்ளனர்.

இவர்கள் மூவரும் கடந்த 17ஆம் திகதி மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டு பின்னர் தலைமன்னாரிலுள்ள விடுதியில் 3 நாட்கள் தங்கியிருந்து நேற்று (20) அதிகாலை 2 மணிய ளவில் கடல்வழிப் பயணத்தை ஆரம் பித்து, அதிகாலை 5 மணியளவில் தனுஸ்கோடியைச் சென்றடைந் துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் திமிலத்தீவு பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய வாசினி, அவரது 11வயது மகள் நைனிக்கா மற்றும் 04 வயது மகன் ரங்கீசன் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் ஒரு பைப்பர் படகில் புறப்பட்டு நேற்று (20) அதிகாலை சுமார் 3 மணி அளவில் தனுஷ்கோடி அரிசிசல்முனை கடற்கரைக்குச் சென்று இறங்கியுள்ளனர்.

தனுஷ்கோடியைச் சென்றடைந்த குறித்த இலங்கைத் தமிழர்களை மீட்ட மெரைன் பொலிஸார் அழைத்துச் சென்று விசாரணைகளை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை ரூபாவில் 2 இலட்சத்து 50 ஆயிரம் கொடுத்து பைப்பர் படகில் தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாக இலங்கை தமிழர் வாசினி பாதுகாப்பு வட்டார அதிகாரிகள் நடத்திய விசாரணையில் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்கு பின் மூவரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்ப டைக்கப்படுவார்கள் என மெரைன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதிமுதல் நேற்று (20) வரை இலங்கையிலிருந்து 42 பேர் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மூதூர் அம்மன் நகரில் புதிய நூலகம் திறப்பு



(கிண்ணியா நிருபர்)

மூதூர் கிழக்கு, கட்டைபறிச்சான் கிராமத்தை இணைத்து USAID நிறுவனத்தினரும், GLOBAL COMINITIES அமைப்பினரும் அம்மன்நகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினருடன் இணைந்து புதிய நூலகமொன்றை திறந்துவைத்தனர்.

அம்மன்நகர் பாடசாலை முன்னாள் அதிபர் இராசதுரை, மூதூர் பிரதேச சபை உறுப்பினர் என்.ஹரிகரகுமார், அம்மன் நகர் RDS, சந்தனவெட்டை, விபுலானந்தா வித்தியாலய அதிபர் - ஆசிரியர் குழாம், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் சூழ நேற்று முன்தினம் (19) காலை 10 மணியளவில் இந்த நூலகம் திறந்துவைக்கப்பட்டது.

# சம்மாந்துறையில் 4000 கிலோ மஞ்சள் அறுவடை

(சம்மாந்துறை நிருபர்)



சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புளேக் ஜே மேற்கு 3 கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள சம்மாந்துறை அல்-உஸ்வா பிளாண்டேசன் வளாகத்தில் மஞ்சள் செய்கையானது வெற்றிகரமாக அறுவடை செய்யப்பட்டது.

அல் - உஸ்வா பிளாண்டேசன் உரிமையாளர் இஸ்லாலெப்பை முஹம்மது முஸ்தபா மௌலவி தலைமையில் இந்த மஞ்சள் அறுவடை நேற்று (20) இடம்பெற்றது.

அல்-உஸ்வா பிலாண்டேசன் வளாகத்தில் மொத்தமாக எட்டு பாத்திகளில் பயிர்செய்கை செய்யப்பட்டிருந்தது. அதில் 4000 கிலோ மஞ்சள் அறுவடையின்போது கிடைக்கப்பெற்றது.

இந்த அறுவடை நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முகம்மது ஹனிபா தலைமையிலான குழுவினர், சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரீ.எம்.நளீர், சம்மாந்துறை பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் ஜனோசன் விஜயவர்தன எனப் பலர் கலந்துகொண்டனர்.

# பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான காரியாலய சீருடைகள் வழங்கிவைப்பு





(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேச செயலகத்தின் சேவைகளை வினைத்திறனாகவும் இலகுவாகவும் மக்களுக்கு வழங்கும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில் திங்கட்கிழமைகளில் காரியாலயத்திற்கு வரும் சேவைநாடிகள் இலகுவில் காரியாலய உத்தியோகத்தர்களை அடையாளம் காணக்கூடிய வகையில் பிரதேச செயலகத்தில் கடமைபுரியும் அனைத்து ஆண் உத்தியோகத்தர்களுக்குமான காரியாலய சீருடை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

உற்பத்தித் திறன் பிரிவுக்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பிராஸ் இம்தியாஸ், ஏ.எம்.பாஷி மற்றும் ஏ.எல்.ஜஸீர் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற மேற்படி சீருடைகள் வழங்கும் நிகழ்வு, பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் நேற்று (20) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல் உட்பட பதவி நிலை உத்தியோகத்தர்களும் ஏனைய காரியாலய உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.





நற்பிட்டிமுனை சிவசக்தி மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் (19) தரம் ஒன்று மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வுக்கு வருகைதந்த பிரதம அதிதி ஆசிரிய ஆலோசகர் பாடசாலை மேம்பாட்டுத் திட்ட இணைப்பாளருமான எஸ்.சிறாஜுதீன் அழைத்து செல்லப்படுவதையும் தரம் 2 மாணவர்கள் வரவேற்கப்படுவதையும் அதிபர், ஆசிரியர்கள் இணைந்துள்ளதையும் படத்தில் காணலாம்.
(படம் - நற்பிட்டிமுனை நிருபர்)



# அரசுக்கு எதிராக மலையகத்தில் உக்கிரமடையும் போராட்டங்கள்






(க.கிஷாந்தன், செ.தி.பெருமாள், செ.திவாகரன், எம். செல்வராஜ், பி.கேதீஷ், இரா.யோகேசன், மனூர சுதத்செல்லஹேவா)

எரிபொருள் விலையேற்றம், அத்தியாவசியப் பொருட்களின் விலையை கண்டித்தும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சரவை உள்ளிட்டவர்களை பதவி விலகக்கோரியும் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் மற்றும் போராட்டங்கள் நடைபெற்றுவரும் நிலையில், தலவாக்கலை, நுவரெலியா, ஹட்டன் மல்லியப்பு சந்தி உள்ளிட்ட மலையகத்தின் பெரும் பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் நேற்று (20) பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்டன.

வீதிகளில் ரயர்களை எரித்தும், பதாகைகளை ஏந்தியவாறும் மக்கள் கோஷங்களை எழுப்பியவாறு குறித்த ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டனர்.

இதனால் வீதிகளில் குறைவான பஸ் சேவைகளையே காணக்கூடியதாக இருந்தது.

மேலும் ரம்புக்கனையில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலுக்கும் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்ட அதேவேளை, நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. ஜனாதிபதி பதவி விலகியே ஆகவேண்டும் என வலியுறுத்தி காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்துக்கும் இதன்போது ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

குறித்த தன்னெழுச்சி போராட்டத்தில் பெருமளவான இளைஞர்கள், யுவதிகள் மற்றும் வாகன சாரதிகள், தோட்டத்தொழிலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அரசுக்கு எதிரான தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதனால் பிரதான வழியிலான போக்குவரத்துகளும் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

## வீதியில் இறங்கிப் போராடுபவர்கள் தங்களது பாதுகாப்பை உறுதிசெய்துகொள்ளுங்கள்

### ரம்புக்கனை சம்பவம் குறித்த அனுதாபச் செய்தியில் இராதா எம்.பி. வேண்டுகோள்

(க.கிஷாந்தன்)

ரம்புக்கனையில் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து களத்தில் இறங்கிப் போராடிய இளைஞர்களை சுட்டுக்கொன்ற அரசாங்கத்தின் செயற்பாடுகளை வன்மையாக கண்டிப்பதோடு, மரணித்த இளைஞர்களின் குடும்பத்திற்கு மலையக மக்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறேன் - என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனையில் இடம்பெற்ற சம்பவம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினரின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,



ராஜபக்ஷ அரசாங்கம் எப்போதெல்லாம் ஆட்சிக்கு வந்ததோ, அப்போதெல்லாம் உரிமைக்காக போராடியவர்களை சுட்டுக்கொலை செய்திருக்கிறார்கள். இந்த செயற்பாடானது ஜனநாயகத்திற்கு எதிராக விடுக்கப்பட்டுள்ள பாரிய சவாலாகும். அதனால் மேலும் வீதியில் இறங்கிப் போராடுகின்ற இளைஞர், யுவதிகள் தங்களுடைய பாதுகாப்பை உறுதிசெய்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனை சம்பவமானது இலங்கையில் மேலும் மனித உரிமைகள் மீறப்படுகின்றதை சர்வதேசத்திற்கு உணர்த்துவதாக அமைந்துள்ளது. இது எங்களுடைய பொருளாதாரத்தை மேலும் பலவீனப்படுத்தும். இதனால் சுற்றுலாத்துறையும் பாதிக்கப்படும். வெளிநாட்டு முதலீடுகள் இலங்கையில் முதலிடப்படமாட்டாது. வெளிநாடுகள் பொருளாதார ரீதியாக எங்களுக்கு உதவி செய்வதை மீண்டும் ஒரு முறை சிந்தித்து பார்க்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இலங்கைக் குழுவினர் அங்கு சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் உங்கள் நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுகின்றதே என்று கேள்வி கேட்டால் இவர்கள் கூறப்போகும் பதில் என்ன? - இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

## உரிமைக் குரலுக்கு செவிசாய்க்கும் தலைமையிடம் நாட்டை ஒப்படையுங்கள்

### வடிவேல் சுரேஷ் எம்.பி.



காலிமுகத்திடலில் நடைபெற்றிருக்கும் போராட்டத்திற்கு வலுசேர்ப்பதற்காக மலையக மக்களும் ஆங்காங்கே எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஆனாலும் இவர்களின் உரிமைக் குரல் செவிடன் காதில் ஊதிய சங்கே. மக்களின் உரிமைக் குரலுக்கு செவிசாய்த்து நாட்டை வழிநடத்தக்கூடிய தலைமையிடம் ஒப்படைத்துவிட்டு தயவுசெய்து வீட்டிற்கு செல்லுங்கள் - என இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

'எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி இல்லார்கண் இல்லது அரண்'. கோட்டைக்குத் தேவையான எல்லா வித சிறப்புகளும் இருந்தாலும்கூட உள்ளிருந்து செயல்படுவோர் திறமையற்றவர்களாக இருந்தால் எந்தப் பயனும் கிடையாது. இவ்வாறானதொரு சூழ்நிலையே இன்று நம் நாட்டிற்கு ஏற்பட்டுள்ளது. வரலாற்றில் என்றுமில்லாதவாறு கோதுமை மாவின் விலை ஒரே சமயத்தில் 40 ரூபாவாக அதிகரித்துள்ளது. மேலும் பெற்றோல், டீசலின் விலையும் அதிகரித்துள்ளது. இத்தகையதொரு சூழ்நிலையிலேயே 'எல் போர்ட்' அமைச்சர்களுக்கு பதவி வழங்கியுள்ளார்கள். இதனை ஒருபோதும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார்.

## பலாங்கொடை வைத்தியசாலை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை அரச பொதுவைத்தியசாலையில் நிலவும் மருந்து தட்டுப்பாடு காரணமாக சில நோய்களுக்கான சிகிச்சைகள் மேற்கொள்ள முடியாதுள்ளதாக தெரிவித்து வைத்தியசாலை ஊழியர்கள் நேற்று (20) அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

மருந்து தட்டுப்பாடு காரணமாக தம்மால் வழமைபோல் நோயாளர்களுக்கான சிகிச்சைகளை வழங்க முடியாதுள்ளதாகவும் பெரும் எதிர்பார்ப்புகளோடு வைத்தியசாலைக்குவரும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்நிலைமையை கண்டித்து வைத்தியசாலை ஊழியர்கள் நேற்று வைத்தியசாலை வளாகத்தில் அமைதி ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

## மாத்தளை மலரன்பன் வைத்தியசாலையில்

(கண்டி நிருபர்)



நாவல் மற்றும் சிறுகதை எழுத்தாளரும், நூலாசிரியரும், பாடலாசிரியருமான மாத்தளை மலரன்பன் வாகன விபத்தில் காயமடைந்து நேற்று மாத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவர் பாதையில் கால்நடையாகச் சென்றுகொண்டிருந்தபோது வேன் ஒன்று மோதியதில் காயமடைந்து மாத்தளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவர் உடல் நலம் பெற்று மீண்டும் எழுத்துத்துறைப் பணியை மேற்கொள்ள வேண்டுமென மலையக எழுத்தாளர் சமூகம் பிரார்த்திக்கின்றது.

விபத்துச் சம்பவம் தொடர்பில் மாத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துக்கு அரசே பொறுப்புக்கூற வேண்டும்

### ஜீவன் தொண்டமான் எம்.பி கண்டனம்

(தலவாக்கலை நிருபர்)



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வன்முறையை ஒருபோதும் ஆதரித்தது கிடையாது எனவும் ரம்புக்கனை துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திற்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும் எனவும் இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மக்களால் ஜனநாயக முறையில் மேற்கொள்ளப்படும் போராட்டங்களின்போது பொலிஸார் வன்முறையை கையில் எடுத்துள்ளமையானது கண்டிக்கத்தக்கது. நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையினால் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ரம்புக்கனையில் பொதுமக்களால் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வார்ப்பாட்டத்தை நிறுத்துவதற்காக பொலிஸார் நடத்திய கண்ணீர்ப் புகைக்குண்டு தாக்குதலை தொடர்ந்து பொலிஸாரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், சிலர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பொறுப்புக் கூற வேண்டிய அமைச்சு பதிலளித்தே ஆகவேண்டும் என்பதுடன், நாட்டில் ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாடுகள் இடம்பெறுமானால் அதை இ.தொ.கா. பார்த்துக்கொண்டிருக்காது. நாட்டில் இன்று உயிர்ச்சேதம் ஏற்படும் அளவிற்கு நாடு இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அரசு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.




நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மாத்தளை நகரில் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்வதற்காக நேற்று (20) எரிபொருள் விநியோகிக்கும் நிலையத்தில் மக்கள் வரிசையில் காத்திருப்பதை படத்தில் காணலாம் (படம்: மாத்தளை நிருபர்)

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com



தலவாக்கலை தேசிய பாடசாலையில் தரம் 1 மாணவர்களை பாடசாலைக்கு உள்வாங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் கிருஸ்ணசாமி தலைமையில் நேற்று முன்தினம் (19) பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது. இதன்போது மாணவர்கள் வரவேற்கப்படுவதையும் பாடசாலையின் அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டதையும் படங்களில் காணலாம். (தலவாக்கலை நிருபர்)

# இன்று 57ஆவது நாளாகவும் தொடரும் போர்:



# உக்ரைனின் அனைத்து வளங்களையும் அழிக்க ரஷ்யா சதித் திட்டம்

உக்ரைன் போரில் புதிய கட்டத்தை தொடங்கியிருப்பதாக ரஷ்யா அறிவித்துள்ளது. இதில், உக்ரைனின் அனைத்து வளங்களையும் அழிக்க திட்டமிட்டுள்ள ரஷ்யா, மரியுபோலில் போரிடும் உக்ரைன் வீரர்கள் அனைவரும் உடனே சரணடைய கெடு விதித்துள்ளது. உக்ரைனுக்கு ஆயுத விநியோகம் செய்யும் நேட்டோ நாடுகளை அச்சுறுத்த போலந்து எல்லையிலும் குண்டு வீசி 7 பேரைக் கொன்றுள்ளது.

உக்ரைன் நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி ரஷ்யா போர் தொடுத்தது. இந்த போர் சில நாட்களில் முடிவுக்கு வந்துவிடும் என எதிர்ப்பார்க்கப்பட்ட நிலையில், இன்று 57ஆவது நாளாகவும் தொடர்கிறது.

இத்தனை நாட்கள் பதுங்கி அடித்த உக்ரைன், மேற்கு நாடுகள் ஆயுத உதவியால் ரஷ்யாவுக்குள் புகுந்து அதிரடி தாக்குதல் நடத்தியது. மேலும், கருங்கடலில் நிறுத்தப்பட்டிருந்த ரஷ்யாவின் மிகப்பெரிய போர்க் கப்பலை உக்ரைன் அழித்ததால், ஆத்திரமடைந்த ரஷ்யா, உக்ரைனில் முக்கிய நகரங்களில் ஒரேநேரத்தில் ஏவுகணைத் தாக்குதல் மற்றும் குண்டு மழை பொழிந்து வருகிறது. இதனால் மரியுபோலிலுள்ள மிகப்பெரிய அசோவ்ஸ்டல் இரும்பு தொழிற்சாலையை ரஷ்யப் படைகள் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இங்கு எதிர் தாக்குதல் நடத்திவரும் உக்ரைன் வீரர்கள் ஆயுதங்களை கீழே போட்டு சரணடைந்தால், உயிர் பிச்சை அளிப்பதாக ரஷ்யா கெடு விதித்தது. ஆனால், ''எங்களுடைய பகுதியை விட்டு தர மட்டோம். மரியுபோலை மீட்பது எப்படி என்று எங்களுக்குத் தெரியும்'' - அந்நாட்டு ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இதனால், அசோவ்ஸ்டல் இரும்புத் தொழிற்சாலையில் பதுங்கியுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் மற்றும் 2,500 உக்ரைன் வீரர்கள் மீது ரஷ்யா குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகிறது. ஒட்டுமொத்தமாக சிதைந்து கிடக்கும் மரியுபோல் நகரத்தில் மிச்சம் இருப்பது இந்த ஆலை மட்டுமே. இதை கைப்பற்றினால் ஒட்டுமொத்தமாக மரியுபோலை கைப்பற்றி விடலாம் என்று எண்ணி, அங்குள்ள உக்ரைன் வீரர்களை உடனடியாக சரணடைய ரஷ்யா உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், கிழக்கு உக்ரைனிலுள்ள தொழில்துறை மையப்பகுதியை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என்று முழு அளவிலான தரைவழித் தாக்குதலை தீவிரப்படுத்தி போரின் புதிய கட்டத்தை ரஷ்யா தொடங்கியுள்ளது என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, கிழக்கு உக்ரைன் டான்பாஸ் பிராந்தியம், மரியுபோல், மேற்கு உக்ரைனில் உள்ள லிலிவ் மற்றும் தெற்கு உக்ரைன் என அனைத்து பகுதிகளிலும் ஏவுகணை மற்றும் குண்டுகளை வீசி ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது.

லுஹான்ஸ்க் பிராந்தியத்திலுள்ள கிரெமின்னா மற்றும் மற்றொரு நகரத்தில் கடும் மோதல் இடம்பெற்று வருகிறது. பீரங்கித் தாக்குதலால் ஏழு குடியிருப்புக் கட்டடங்கள் தீயில் கருகியுள்ளன. அத்தோடு உக்ரைனின் ஒலிம்பிக் குழு பயிற்சிபெறும் விளையாட்டு வளாகமும் குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. ரஷ்யப் படைகள் பெரும்பாலான பகுதிகளை சுடுகாடாக்கும் எண்ணத்தில் கட்டடங்களை தரைமட்டமாகி வருகின்றன. இதனால், மக்கள் வெளியேற முடியாமல் செத்து மடிகின்றனர்.

போலந்து எல்லைக்கு அருகில் நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டனர். இந்தப் பகுதி வழியாகத்தான் உக்ரைனுக்கு நேட்டோ நாடுகள் ஆயுத உதவிகளை வழங்கின. இதனால், போலந்தை அச்சுறுத்தும் வகையில் ரஷ்யா இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது. இதேபோல், பல்வேறு நகரங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு லிலிவ்வில் தங்குமிடம் அளித்த ஹோட்டல் ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. ரஷ்ய பாதுகாப்பு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் இகோர் கொனாஷென்கோவ் தெரிவிக்கையில்,

"3 வெடிமருந்து கிடங்குகள், ஒரு எரிபொருள் கிடங்கு, 5 கட்டளைத் தலைமையகம், உக்ரைன் வீரர்கள், இராணுவ வாகனங்களின் குழுக்கள் உட்பட கிழக்கு மற்றும் மத்திய உக்ரைனிலுள்ள 20இற்கும் மேற்பட்ட இராணுவ இலக்குகளை குறிவைத்து ஏவுகணைத் தாக்குதல் மூலம் ரஷ்யா அழித்துள்ளது. கிழக்கில் போபாஸ்னா மற்றும் கிராமடோர்ஸ்க் மற்றும் மத்திய உக்ரைனிலுள்ள யாம்பில் அருகேயுள்ள நான்கு வெடிமருந்து கிடங்குகள் மற்றும் 3 உக்ரைன் படை குழுக்களை அழிக்க ஏவுகணை வீசப்பட்டது. 315 உக்ரைன் இலக்குகளை தாக்க இராணுவம் பீரங்கிகளைப் பயன்படுத்தியது. போர் விமானம், இராணுவ உபகரணங்களை குறிவைத்து 108 தாக்குதல்களை நடத்தியுள்ளது'' என்று தெரிவித்தார்.

**போரில் வழக்கமான ஆயுதங்களைக்கொண்டே தாக்குதல்**

உக்ரைனில் அணு ஆயுதங்களை தவிர்த்து, வழக்கமான ஆயுதங்களை மட்டுமே பயன்படுத்தி வருவதாக ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜே லாவ்ரோவ் தெரிவித்துள்ளார்.

உக்ரைனுடனான போர் இன்று 57ஆவது நாளை எட்டிய நிலையில், போரின் மற்றொரு தொடக்கத்தை ஆரம்பித்துள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. டான்பாஸ் பகுதிகளில் உயர் துல்லிய அளவிலான ஏவுகணைகளை வீசி 13 முக்கிய பகுதிகள், 60 இராணுவ நிலைகளை அழித்ததாக ரஷ்ய பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

கிழக்கு உக்ரைனிலுள்ள லுகான்ஸ்க் மற்றும் Donetsk பகுதிகளை முழுமையாக கைப்பற்றி கிரிமியாவிற்கு இடையிலான நிலப்பரப்பு இணைப்பை ஏற்படுத்த ரஷ்யா முயல்வதாகவும் உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது. அத்தோடு ஆயுதங்களைக் கீழே போடும் உக்ரைன் வீரர்களுக்கு மனிதாபிமான பாதைகளை மரியுபோல் வழியாக திறந்துள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

**போரை நீடிக்க ஆயுதம் வழங்குகிறது அமெரிக்கா**

அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவராமல் ஓராண்டுக்கு மேல் நீடிக்க விரும்புவதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்கய் ஷோய்கு குற்றஞ்சாட்டியுள்ளார்.

உக்ரைனில் கடைசி மனிதர் போரில் மடியும் வரை ஆயுதங்களை வழங்க பல மில்லியன் டொலர்கள் இறைக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். உக்ரைனுக்கு பாதுகாப்பு நிதியாக 800 மில்லியன் டொலர் அளிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த வாரம் அறிவித்தார்.

ஆயுதங்கள் வழங்குவதன் மூலம் போரை நீடிக்க மேற்கத்தேய நாடுகள் முயற்சிப்பதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

**பெல்ஜியம் - நெதர்லாந்து - ஆஸ்திரியா தூதரக அதிகாரிகள் வெளியேற உத்தரவு**

உக்ரைனுக்கு ஆதரவுக் கரம் நீட்டியதாக பெல்ஜியம், நெதர்லாந்து நாடுகளின் தூதரக அதிகாரிகளை வெளியேறுமாறு அறிவித்த ரஷ்யா, ஆஸ்திரியா தூதரக அதிகாரிகளையும் வெளியேற உத்தரவிட்டது.

அத்தோடு 2 வாரத்திற்குள் நெதர்லாந்து மற்றும் பெல்ஜியம் நாடுகளின் தூதரக அதிகாரிகள் ரஷ்யாவை விட்டு வெளியேற வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ரஷ்ய அதிகாரிகள் 38 பேரை பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்து வெளியேற்றியதற்கு பழிக்குப் பழி வாங்கும் நிகழ்வாக ரஷ்யா உத்தரவிட்டுள்ளது.

ரஷ்ய வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், நெதர்லாந்தின் 15 அதிகாரிகள், ஆஸ்திரியாவைச் சேர்ந்த 4 அதிகாரிகள் உள்ளிட்டோர் நாட்டை விட்டு வெளியேற உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் மீதும் நடவடிக்கை எடுக்க ரஷ்யா திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



## கின்னஸ் சாதனை படைத்த உலகிலேயே மிக உயரமான குடும்பம்

உலகிலேயே மிக உயரமான நபர்கள் உடைய குடும்பம் என்று கின்னஸ் சாதனை படைத்துள்ளது அமெரிக்காவின் எஸ்கோ பகுதியில் வசிக்கும் 5 பேரைக்கொண்ட குடும்பமொன்று. அந்த குடும்பத்தில் உள்ளவர்களின் உயரத்தை சேர்த்தால், பாதி டென்னிஸ் மைதானத்தின் நீளத்திற்கு சமமாகும் என தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை கடற்படை அட்டூழியம்

வேதாரண்யம் அருகே மீனவர்களை தாக்கி இலங்கை கடற்கொள்ளையர்கள் அட்டூழியத்தில் ஈடுபட்டனர்.

ஆறுகாட்டுத்துறையை சேர்ந்த 9 மீனவர்களிடமிருந்து செல்போன், ஜிபிஎஸ் கருவி, மீன்கள், எரிபொருட்கள் ஆகியவையை பறித்துள்ளனர். மேலும் மீனவர்கள் ஆறுமுகம் மற்றும் ரமேஷை கீழே தள்ளிவிட்டு இலங்கை கடற்கொள்ளையர்கள் கட்டையால் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆப்கான் குண்டு வெடிப்பில் 20 பேர் பலி; பலர் படுகாயம்



ஆப்கானிலுள்ள இரு பாடசாலைகள் மீது நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் 20இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர்.

தலைநகர் காபூல் அருகே தர் ஷி பர்ச்சி என்ற இடத்தில் அப்துல் ரஹீம் ஷாகித் என்ற உயர்நிலை பரீட்சைகள் நடைபெற்றுவரும் நிலையில் சில நிமிட இடைவெளியில் அடுத்தடுத்து 3 குண்டுகள் வெடித்துச் சிதறின. இதில் 6 பேர் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இதில் மாணவர்கள் உட்பட பலர் காயமடைந்தனர். இந்தப் பகுதியில் ஷியா ஹசாரா சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் வசிக்கின்றனர். அவர்களை குறிவைத்து சன்னி தீவிரவாத குழுக்கள் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. இந்த குண்டுவெடிப்பில் ஷியா சமூகத்தைச் சேர்ந்த சிலர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், காயமடைந்த மாணவர்கள் உட்பட ஷியா பிரிவைச் சேர்ந்தவர்கள் மக்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதேபோல் அதே பகுதியிலுள்ள மும்தாஜ் பாடசாலை மீது மேற்கொள்ளப்பட்டது. இந்த இரு சம்பவங்களில் மொத்தமாக 20இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சிக்கு எதிராக ஐ.எஸ். தீவிரவாதிகள் உள்ளனர். இதனால், ஐ.எஸ். தீவிரவாதிகள் இந்த நாசவேலையை செய்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

## உலக செய்திகள்



'ஓம் சக்தி...' என்று கோஷம் விண்ணை பிளக்க, பக்தர்கள் தேரின் வடம் பிடித்து இழுக்க அசைந்தாடி வந்த திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோயில் சித்திரை தேர்....

## வேலை இல்லை; கல்லூரி வாசலில் தேநீர் விற்கும் பட்டதாரி பெண்



பீகார் மாநிலத்தில் பட்டதாரி பெண்ணொருவர், வேலை கிடைக்காத காரணத்தினால் மனம் தளராமல் கல்லூரி வாசலில் தேநீர் விற்று வருகிறார்.

பூர்னியா மாவட்டத்தைச் சேர்ந்த பிரியங்கா குப்தா என்ற பெண், பொருளாதாரம் பயின்ற நிலையில், தான் படித்த படிப்பிற்கு வேலை கிடைக்காத நிலையில், அரச பணிகளுக்கான தேர்வுகளையும் எழுதினார்.

கடந்த 2 ஆண்டுகளாக அவருக்கு வேலை கிடைக்காத நிலையில், அவரது நண்பர்கள் 30 ஆயிரம் ரூபா கொடுத்து தேநீர் கடை அமைக்க உதவியுள்ளனர்.

தேநீர் விற்க உறவினர்கள் உள்ளிட்டோர் எதிர்மறையாக கருத்து தெரிவித்த நிலையில், மன உறுதியோடு பாட்னாவில் மகளிர் கல்லூரிக்கு அருகே தேநீர் கடை அமைத்ததாக பிரியங்கா குப்தா குறிப்பிட்டார். தனது கடையில் மசாலா ரீ, சாக்லேட் ரீ போன்ற பல்வேறு வகையான தேநீர் விற்கப்படுவதாகவும், கல்லூரி மாணவிகள் தனது தேநீரை நாடி அதிகளவில் வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## பாக்குநீரிணையை 10 மணி நேரத்தில் நீந்தி மும்பையைச் சேர்ந்த மாணவன் சாதனை

*(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)*

இந்தியா - இலங்கைக்கு இடையேயுள்ள தனுஷ்கோடி - தலைமன்னாரை இணைக்கும் பாக்குநீரிணை 10 மணிநேரத்திற்குள் நீந்தி நவி மும்பையைச் சேர்ந்த அன்சுமான் என்ற மாணவன் சாதனை படைத்துள்ளார்.

மகராஷ்டிரா மாநிலம் நவி மும்பையைச் சேர்ந்த சந்திப் ஜிங்க்ரான் - கிரன் தம்பதியினரின் மகன் அன்சுமான் (வயது 16). இவர் அங்குள்ள தனியார் பாடசாலையில் 11ஆம் வகுப்பு படித்து வருகிறார். அத்தோடு மாநில மற்றும் தேசிய அளவிலான நீச்சல் போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

இவர் தனுஷ்கோடியிலிருந்து இலங்கையிலுள்ள தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையிலுள்ள பாக்குநீரிணையை நீந்தி கடப்பதற்காக இந்திய வெளியுறவுத்துறை, இலங்கைத் தூதரகம் மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சுக்கு அனுமதி கோரியிருந்தார்.

இந்திய - இலங்கை இரு நாட்டு அனுமதியும் கிடைத்த நிலையில், அவரது தந்தை ஜிங்க்ரான், பயிற்சியாளர்கள் கோகுல் காமத் மற்றும் அமித் அவலே ஆகியோருடன் இலங்கைக்கு வந்து செவ்வாய்க்கிழமை அதிகாலை 05.15 மணியளவில் தலைமன்னாரிலிருந்து நீந்தத் தொடங்கிய அன்சுமான் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.04 மணியளவில் (9 மணி நேரம் 49 நிமிடங்களில்) தனுஷ்கோடி அரிச்சல் முனை பகுதியை சென்றடைந்தார். இந்த சாதனையை தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பார்வையாளர் விஜய் குமார் உறுதிப்படுத்தினார்

சாதனை குறித்து அன்சுமான் தெரிவிக்கையில்,

"பாக்குநீரிணையை கடக்கும் எனது பணியை முடித்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அடுத்த



மூன்று வருடங்களில் ஏழு கடல்களில் நீந்தி சாதனை படைக்க வேண்டும்'' - என்றார்.

இதற்கு முன்னதாக தலைமன்னார், தனுஷ்கோடி இடையேயான பாக்குநீரிணையை (28.03.2019 அன்று) தேனியைச் சேர்ந்த ஆர்.ஜெய் ஜஸ்வந்த் தனது 10 வயதிலும், (12.04.1994 அன்று) 12 வயதில் குற்றாலீசுவரனும், (20.03.2022 அன்று) மும்பையைச் சேர்ந்த ஜியா ராய் (வயது 13) என்ற ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட சிறுமியும், (29.03.2022 அன்று) தேனியைச் சேர்ந்த சிநேகன் (வயது 14) ஆகியோர் குறைந்த வயதுகளில் நீந்தி கடந்துள்ளனர். இந்த வரிசையில் அன்சுமான் பாக்குநீரிணையை நீந்தி கடந்த 19ஆவது நீச்சல் வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

# “கார்த்திக்கின் ஆட்டத்தைப் பார்க்கையில் எனக்கு மீண்டும் கிரிக்கெட் ஆட வேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறது”

## – டி வில்லியர்ஸ்



ஆர்.சி.பி. அணியில் அதிரடியாக ஆடிவரும் தினேஷ் கார்த்திக்கு மீண்டும் கிரிக்கெட் விளையாட வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டதாக ஆர்.சி.பி. அணியின் முன்னாள் வீரர் ஏ.பி. டி வில்லியர்ஸ் கூறியுள்ளார்.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் சிறப்பான ஃபார்மில் ஆர்.சி.பி. அணி இருந்து வருகிறது. அணியின் வெற்றிகளில் முக்கிய காரணமாக இருப்பவர் தமிழக வீரர் தினேஷ் கார்த்திக். முதல் 7 போட்டிகளில் 2 முறை ஆட்டநாயகன் விருது பெற்றுவிட்டதால், அடுத்த ஃபினிஷர் கிடைத்துவிட்டார் என ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர். இந்நிலையில், தினேஷ் கார்த்திக்கின் ஆட்டத்தைப் பார்த்து டி வில்லியர்ஸ் ஆச்சரியப்பட்டுள்ளார்.

இதுகுறித்து பேசிய அவர், “தினேஷ் கார்த்திக் தற்போது தனது வாழ்நாளில் சிறந்த ஃபார்மில் இருக்கிறார். ஆனால், அது எப்படி வந்தது என எனக்குப் புரியவில்லை. சில ஆண்டுகளாக பெரியளவில் கிரிக்கெட் விளையாடவில்லை, வர்ணனையாளராக களமிறங்கிவிட்டார். எனினும், தற்போது இப்படி அதிரடி காட்டுகிறார். அவரால் ஆசை வந்துவிட்டது. அவரை பார்க்கும்போது 360 டிகிரி வீரர் போன்று தெரிகிறது. அவரின் ஆட்டத்தைப் பார்த்தால், எனக்கு மீண்டும் கிரிக்கெட் ஆட வேண்டும் என்ற ஆசை ஏற்படுகிறது.''

“இக்கட்டான சூழலில் அனுபவம் கை கொடுக்கிறது. அவரின் ஃபார்ம் இதேபோன்று இருந்தால், ஆர்.சி.பி. புதிய உச்சத்தை எட்டும். ஒரே ஆச்சரியம் கடைசியாக நான் தினேஷை பார்த்தபோது லண்டனில் வர்ணனையாளராக இருந்தார். அவரின் கிரிக்கெட் எதிர்காலமே முடிந்துவிட்டதாக நினைத்தேன். ஆனால், அனைவருக்குமே அதிர்ச்சி கொடுத்துள்ளார். அதுவும் இக்கட்டான சூழலை கையாள்வதில் தான் கிங் என நிரூபித்துக் காட்டியுள்ளார்'' என தெரிவித்தார்.

# கோல்ஃப் போட்டியில் விளையாடும் நம்பர் ஒன் டென்னிஸ் வீராங்கனை ஆஷ்லே



டென்னிஸ் உலகின் முன்னாள் நம்பர் வன் வீராங்கனையான ஆஷ்லே பார்ட்டி கோல்ஃப் கண்காட்சிப் போட்டியில் விளையாடுவார் என்று அமைப்பாளர்கள் தெரிவித்தனர். அவரது அதிர்ச்சி ஓய்வுக்குப் பிறகு அவர் கோல்ப் வீரராகலாம் என்ற ஊகத்தை அதிகப்படுத்தினர்.

மூன்று முறை கிராண்ட்ஸ்லாம் சம்பியனான 25 வயதான ஆஷ்லே பார்ட்டி மார்ச் மாதம் விளையாட்டிலிருந்து விலகியபோது டென்னிஸ் உலகை திகைக்க வைத்தார். ஆனால், ஐகான்ஸ் சீரிஸ் அமைப்பாளர்கள் ஜூன் மாதம் அமெரிக்க நிகழ்வில் போட்டியிடும் விளையாட்டு நட்சத்திரங்களில் ஒருவராக இருப்பார் என்று தெரிவித்தனர்.

“உலகின் சிறந்த விளையாட்டு வீரர்கள், அனைத்து நம்பமுடியாத கோல்ப் வீரர்கள் மற்றும் கடுமையான போட்டியாளர்களின் மவுண்ட் ரஷ்மோருடன் ஐகான்ஸ் தொடரை அமெரிக்காவில் தொடங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்“ என்று ஐகான்ஸ் சீரிஸ் தலைமை நிர்வாகி தாமஸ் புரூக்ஸ் ஓர் அறிக்கையில் தெரிவித்தார்.

# 0 போட்டிகளில் அடிக்காத கோஹ்லி...

## சமீரவின் பந்தில் கோல்டன் டக்அவுட்



கிரிக்கெட் உலகின் ரன் மெஷின் என அழைக்கப்படும் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் விராட் கோஹ்லி 100 போட்டிகளைக் கடந்தும் இதுவரை ஒற்றை சதம் கூட அடிக்காததால் ரசிகர்கள் மிகுந்த சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் திகதி கொல்கத்தாவிலுள்ள ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் வைத்து நடைபெற்ற பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியில் இறுதியாக சதமடித்த விராட் கோஹ்லி அதனை அடுத்து விளையாடிய எந்தவொரு போட்டியிலும் தனது வழக்கமான மற்றும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை.

இந்நிலையில், நடப்பு இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் லக்னோ சுப்பர் ஜயண்ட்ஸ் அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் விளையாடிய விராட் கோஹ்லி முதல் பந்தில் கோல்டன் டக் அவுட் ஆகி வெளியேறியதைத் தொடர்ந்து, சதமடிக்காமல் மைதானத்தைவிட்டு வெளியேறும் 100ஆவது போட்டி என்று அவரது ரசிகர்கள் வருத்தம் தெரிவித்து வருகின்றனர்.

ஒருமுனையில் விராட் கோஹ்லியின் மோசமான ஃபார்ம்மிற்கு ரசிகர்கள் வருத்தம் தெரிவித்து வந்தாலும், மறுபக்கம் விராட் கோஹ்லிக்கு ஆதரவான மற்றும் உறுதுணையாக கருத்துகளையும் அவரது ரசிகர்கள் இணையத்தில் தெரிவித்து வருகின்றனர்.




விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# இலங்கை உதைபந்துக்கு விடைகொடுக்கும் அமீர் அலர்ஜிக்



இலங்கை தேசிய உதைபந்து அணியின் முன்னாள் தலைமைப் பயிற்சியாளரும், தற்போதைய இலங்கை உதைபந்து தொழில்நுட்ப இயக்குனருமான அமீர் அலர்ஜிக், எதிர்வரும் ஜூன் மாதத்துடன் இலங்கை உதைபந்தில் தனது சேவையினை நிறைவுசெய்கிறார்.

கடந்த 2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி இலங்கை தேசிய உதைபந்து அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக நியமனம் பெற்ற அமீர் அலர்ஜிக், இலங்கை அணியின் முன்னேற்றத்திற்காக தனது ஐரோப்பிய அனுபவத்தினை சிறந்த முறையில் வழங்கியிருந்தார். கடந்த இரண்டு வருடங்களாக தேசிய அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக செயற்பட்ட அமிர் அலர்ஜிக், இவ்வருடம் பெப்ரவரி மாதம் இலங்கை உதைபந்து அணியின் தொழில்நுட்ப இயக்குனராகவும் நியமனம் பெற்றார்.

தற்போது இலங்கையில் பொருளாதார நெருக்கடி மற்றும் வெளிநாட்டு நாணயத்தில் சம்பளம் வழங்குவதில் சிரமங்கள் நிலவுகின்றன. இவற்றைக் கருத்திற்கொண்டு, இலங்கை கால்பந்து சம்மேளனம் மற்றும் தலைமைப் பயிற்றுவிப்பாளர் இடையே மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் நிறைவில், அமிர் அலர்ஜிக்கின் சேவையை நிறைவுக்கு கொண்டு வருவதற்கு இரு தரப்பினரும் சம்மதம் தெரிவித்தனர் என இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர் தெரிவித்தார்.

தனது சேவையின் நிறைவு குறித்து கருத்து தெரிவித்த தலைமைப் பயிற்றுவிப்பாளர் அமிர் அலர்ஜிக், “நான் மிகவும் மகிழ்ச்சியுடன் செல்கிறேன். நான் மீண்டும் நம்பிக்கையை கொண்டு வந்துள்ளேன், மரியாதையை பெற்றுள்ளேன், கிராமப்புறங்களுக்கு உதைபந்தை கொண்டுசென்றுள்ளேன். என் மீது நம்பிக்கை வைத்த தலைவர் ஜஸ்வர் மற்றும் அவரது நிர்வாகத்திற்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். நாம் தொடங்கியதை தொடர வேண்டும். நான் போகலாம் ஆனால் என் இதயம் இங்கேயே இருக்கும்'' என்றார்.

# நடுவரின் தவறான முடிவு, அடுத்த பந்தில் அவுட் ஆக்ரோஷத்துடன் கேவலமாக திட்டிய ஸ்டோய்னிஸ்



2022 ஐ.பி.எல். தொடரின் 31ஆவது லீக் போட்டியில் நேற்று முன்தினம் லக்னோ - பெங்களூர் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் ஆர்.சி.பி. அணி 18 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆர்.சி.பி. அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 181 ஓட்டங்களை குவித்தது. அணித்தலைவர் பாப் டு பிளசிஸ் 64 பந்துகளில் 96 ஓட்டங்களை விளாசினார்.

182 என்ற கடினமான இலக்கை நோக்கி களமிறங்கிய லக்னோ அணி முக்கிய விக்கெட்டுகளை இழந்த போதும், சீரான வேகத்தில் இலக்கை துரத்தியது. இறுதியில் 12 பந்துகளில் லக்னோ அணிக்கு 34 ஓட்டங்கள் வெற்றிக்காக தேவைப்பட்டது. களத்தில் மார்கஸ் ஸ்டோய்னிஸ் மற்றும் ஜேசன் ஹோல்டர் இருந்ததால் வெற்றி வாய்ப்பு பிரகாசமாகவே இருந்தது.

அப்போதுதான் சர்ச்சை கிளம்பியது. ஆட்டத்தின் 19ஆவது ஓவரின் முதல் பந்தை ஜோஸ் ஹேசில்வுட் வைட்டாக வீசினார். ஆனால், நடுவர் அதற்கு வைட் கொடுக்கவில்லை. துடுப்பாட்ட வீரரான ஸ்டோய்னிஸ் நகர்ந்துவிட்டதாக கூறி சரியான பந்து என அறிவித்தது ரசிகர்களுக்கே அதிர்ச்சி அளித்தது. இதனால் கடும் ஆத்திரமடைந்த மார்கஸ் ஸ்டோய்னிஸ் அடுத்த பந்தில் வேண்டுமென்றே வைட் லைனில் சென்று நின்றார்.

இதனை சரியாக பயன்படுத்திக்கொண்ட ஹெசில்வுட், பந்தை ஸ்டம்ப் லைனுக்கு வீசி, போல்ட் ஆக்கினார். தான் ஆட்டமிழந்ததால் கோபத்தின் உச்சிற்கே சென்ற ஸ்டோய்னிஸ், களத்தில் மிகவும் ஆக்ரோஷத்துடன் கத்தினார். ஒரு கட்டத்தில் ஸ்டம்ப்பை உடைக்கும் அளவிற்கே சென்றுவிட்டார்.

B R
போட்டியை காண



# மூளைக் கட்டியால் உயிரிழந்த பங்களாதேஷ் கிரிக்கெட் வீரர்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் மொஷரப் ஹொசைன் ரூபெல் நேற்று முன்தினம் தனது 40ஆவது வயதில் காலமானார்.

இடது கை சுழற்பந்து வீச்சாளரான ரூபெலுக்கு கடந்த 2019ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் மூளையில் கட்டி இருப்பது கண்டறியப்பட்டது. இருப்பினும், கடந்த ஆண்டு ஜனவரியில் அவரது மூளை கட்டியை நீக்குவதற்கு முன்பு ரூபெல் சிகிச்சையின் மூலம் குணமடைந்தார்.

அண்மையில் அவரது உடல்நிலை மோசமடைந்ததையடுத்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதையடுத்து, சில நாட்களுக்கு முன் அவர் வீடு திரும்பியிருந்தார். இந்நிலையில், உடல் நிலை மோசமடைந்ததால் நேற்று முன்தினம் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட போதிலும் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. மொஷரப் ஹொசைன் ரூபெல் கடந்த 2008 முதல் 2016 வரை ஐந்து ஒருநாள் போட்டிகளில் பங்களாதேஷ் அணியை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடியிருந்தார்.

# கே.எல். ராகுலுக்கு அபராதம்!



ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கெதிரான போட்டியில் இந்தியன் ப்ரீமியர் லீக் விதிமுறையை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் லக்னோ சுப்பர் ஜயண்ட்ஸ் அணியின் தலைவர் கே.எல்.ராகுலுக்கு 20 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. நவி மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் அணி வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தில் கே.எல்.ராகுல் மற்றும் மார்கஸ் ஸ்டோய்னிஸ் ஆகிய இருவரும் ஐ.பி.எல். விதிமுறையை மீறியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கே.எல்.ராகுலுக்கு 20 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மார்கஸ் ஸ்டோய்னிஸுக்கு எச்சரிக்கை மாத்திரம் விடுக்கப்பட்டுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7